# 1

# மொழி அமைப்பும் வரலாறும்

பேச்சாலும் எழுத்தாலும் மனிதன் தனது கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்கும் கருவி மொழியாகும். அவன் வாழ்ந்ததும் வாழப் போவதும் மொழியாலேதான். மக்கள் வாழ்வில் பிறந்து மக்களால் வளர்க்கப்பட்டு மக்களின் வாழ்வை நாகரிகமுடையதாக உயர்த்தி வரும் அரிய கலை மொழியே. ஆறறிவு பெற்ற மனித சமுதாயத் தையும் ஐயறிவு கொண்ட விலங்குகளையும் வேறுபடுத்துவது மொழி. நினைப்பிற்கும் எட்டாத நெடுங்காலத்திலிருந்தே அவ னோடு பின்னிப் பிணைந்து வாழ்ந்து வளர்ந்து வரும் மொழி, மனிதனின் வாழ்க்கையில் இல்லையேல் மனிதன் மனிதனாக வாழமுடியாது. மொழி இல்லாவிட்டால் மனித நாகரிகமே இல்லை. மொழி இல்லாத மனித சமுதாயத்தையோ, சமுதாயம் இல்லாத மொழியையோ காண்பது அரிதாகும். மொழி சமூகச் செயலாக விளங்குகிறது. நமது முன்னோர்கள் விட்டுச் சென்ற அறிவுக் கருவூலங்களை நாம் கண்டு துய்ப்பதற்கும் நாம் இன்று பெற்றுள்ள அறிவுச் செல்வத்தை நமது வழித்தோன்றல் களுக்கு வழங்குவதற்கும் மொழி பெருந்துணையாக அமைந்து உள்ளது. மனித வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்தே மனிதன் தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்கவேண்டிய உணர்வோடு முயன்று வந்த முயற்சியின் முற்றிய வளர்ச்சியே இன்றைய மொழியாகும். மொழியின் இத்தகைய வளர்ச்சிக்கும் மொழியை ஆராய்கின்ற மொழியியலின் வளர்ச்சிக்கும் அடிகோலிய இலக்கண நூலாரும் மொழியியல் அறிஞரும் பழைய பண்பாடுகள் பின்பற்றப் பட்ட கதைப் பகுதிகளில் மொழியமைப்பைப் பற்றி ஆராய்ந் துள்ளனர்.

ஒரு மொழியின் அமைப்பை விளக்குவதே அம்மொழியின் இலக்கணம் ஆகும். மொழி மொழியால் விளக்கப்படுகின்றதை இலக்கணம் என்பர். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே தமிழ் மொழிக்குத் தொல்காப்பியர் நல்லதோர் இலக்கணம் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. நம்முடைய பல்வேறு நோக்கங்களுக்காக மொழியைப் பயன்படுத்துகிறோம். மொழி யியலாளன் மொழியைப் பயன்படுத்தும்போது அவனுடைய நோக்கம் மொழிக்கு அகத்தே இருக்கும். மற்றவர்கள் மொழியைப் பயன்படுத்தும் போது அவரிகளின் நோக்கங்கள்

Scanned by TapScanner

மொழிக்குப் புறத்தே இருக்கும். மரபுவழி இலக்கணத்தார், மொழி யியல் அடிப்படையில் இலக்கணம் எழுதுவோர் என இருவகை யுண்டு. மரபுவழி இலக்கணத்தார் தாய்மொழிக்குத்தான் இலக்கணம் எழுதினர். பாணினி வடமொழிக்கும் தொல்காப்பியர் தமிழ் மொழிக்கும் இலக்கணம் எழுதினர். மரபுவழி இலக்கணங்கள் அந்த அந்த மொழிகள் பேசும் மக்கள் சமுதாயத்திற்காக எழுதப்பட்டன. ஆர்டன், போப், பெஸ்கி போன்றோர் தமிழ்மொழியை ஐரோப் பியர் கற்பதற்காக எழுதினர். இவர்களது தாய்மொழி வேறு. இவர் கள் கற்ற இரண்டாவது மொழிக்கு இலக்கணம் எழுதினர். மொழி யியலாளர் (Linguists) மொழியியல் கொள்கைகளை அடிப்படை யாக வைத்து, தங்களுக்குத் தெரியாத மொழிகளுக்கெல்லாம் இலக்கணங்களைப் படைத்தனர். போவாஸ் (Boas), சபீர் (Sapir) போன்றவர்கள் இப்பிரிவைச் சார்ந்தவர்கள். பேச்சு வழக்கிலுள்ள மொழிகளை ஆராயத் தலைப்பட்டனர். மரபுவழி இலக்கணத்தார் இலக்கியத்தை அடிப்படையாக வைத்து இலக்கணங்கள் எழுத, அமைப்பு மொழியியலாளர் பேச்சு வழக்கிலுள்ள மொழிகளுக்கு இலக்கணங்கள் எழுதத் தலைப்பட்டனர்.

ஒரு மொழியின் இயல்புகளை வரையறுத்து விதிமுகத்தான் உணர்த்துவது இலக்கணம். மொழிப்புலமைக்கு இலக்கண அறிவே அடிப்படையாகும். மொழியின் இயல்புகளை உள்ளவாறு விளக்கி யுரைப்பது மொழியியல். மொழியின் இயல்புகளை வரையறுத்து விதிமுகத்தான் உணர்த்துவது இலக்கணம். மொழியின் செயற் பாட்டை விளக்குவது மொழியியல். எழுத்து மொழியே இலக்கண ஆய்வுப்பொருள் ஆகிறது. பேச்சு மொழிக்கு முதன்மை தருகிறது மொழியியல். இலக்கணம் விதி முறைகளை வகுத்துரைப்பது; மொழியியல் இருப்பதை வருணிப்பது. தொகுப்புவழி நெறிமுறையில் மொழியின் இயல்புகளை வறையறுக்க முயல்கிறது. பகுப்புவழி நெறி முறையில் மொழியியல் மொழிப்பண்புகளை விரித்துரைக்கிறது. இலக்கிய வளமிக்க மொழிக்கே இலக்கணம் வகுப்பது; மொழியியல் பழங்குடி மக்களின் பேச்சு மொழியையும் கிளைமொழிகளையும் ஆராய்கிறது. இலக்கணம் பெரும்பாலும் சொல்லியலை அடிப் படையாகக் கொண்டது; சொல்லியலிலே தொடரியலும் பேசப்படுகின்றது. ஒலியன் கோட்பாடு மொழி ஆராய்ச்சிக்கு வழங்கியுள்ள பெருங்கொடை; மொழியியலில் தொடரியலும் தனிச்சிறப்புப் பெற்று விளங்குகின்றது. மரபுவழி இலக்கணத்தாரும் மொழியி யலாளரும் கோட்பாட்டிலும் அணுகுமுறையிலும் வேறுபட்டிருப் பினும், அவர்கள் மொழியின் அமைப்பினை ஆராய்ந்து விளக்கிச் சென்றுள்ளனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

மொழியின் அமைப்பை ஒலியனியல், உருபனியல், தொடரி யல் என்ற தலைப்பின்கீழ் ஆராய்வர். மக்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதன்மூலம் சமூகம் வளர்ச்சியடைந்து வருகிறது. கருத்துப் பரிமாற்றத்தைச் சைகை (gestures) மூலமும், குறியீடு (sign)

Scanned by TapScanner

மூலமும் தெரிவிக்கலாம். ஆனால், இவற்றின்மூலம் நுண்ணிய கருத்துக்களை உணர்த்த முடியாது; பேச்சொலிகள் (vocal sounds) மூலமே எந்தக் கருத்தையும், உணர்த்தமுடியும். பேச்சொலிகள் குறிப்பிட்ட எண்ணிக்கை உடையனவாயினும், இவ்வொலிகளைக் கொண்டு ஆயிரக் கணக்கான சொற்களைப் படைக்கமுடியும். எனவே, கருத்துப் பரிமாற்றத்தில் மொழியும் மொழியில் ஒலியும் சிறப்பாகக் கருதப்படுகின்றன. மொழி எனின் பேச்சொலி என்றே குறிப்பிடலாம்.

பொதுவாக ஒலியியலில் பேச்சொலிகளின் பிறப்பிடம், எண்ணிக்கை, மொழிகளில் அமைந்துள்ள முறை ஆகியவை பற்றி ஆராயப்படுகின்றன. ஒலியியல் ஆராய்ச்சியைப் பொது ஒலியியல் என்றும், சிறப்பு ஒலியியல் அல்லது மொழியின் ஒலியியல் என்றும் இரு வகையாகப் பகுப்பர். ஒரு குறிப்பிட்ட மொழியின் ஒலியியலில் அந்த மொழியின் ஒலிகளின் எண்ணிக்கை, அவற்றின் பாகுபாடு, அவற்றிடையே காணப்படும் அமைப்பு, பொதுத்தன்மை ஆகியவை பற்றி விளக்கப்படுகின்றன.

ஒலியை ஆராயும் முறையில் மூன்று முறைகள் உள்ளன. அவையாவன: (i) பௌதிக ஒலியியல் (acoustic phonetics) இவ்வியலில் பேச்சொலியின் பௌதிகத் தன்மையை ஆராய்தல்: ஒலி அலைகளாக வருவதை அளந்து கணக்கிடுவர். (ii) கேட்பொலியியல் (auditory phonetics): மனிதன் கேட்கும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதாகும். இது சிறந்த முறையாகக் கருதப்படுவதில்லை. (iii) உச்சரிப்பொலியியல் (articulatory phonetics) ஒலியுறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஒலியின் பிறப்பை ஆராய்வதாகும். நமது மரபுவழி இலக்கண ஆசிரியர்கள் இம்முறையிலேயே தமிழ் ஒலிகளின் பிறப்பை விளக்கியுள்ளனர்.

ஒலிப்பு முறையை அடிப்படையாகக் கொண்டு பேச்சொலிகளை உயிர், மெய் என இரண்டாகப் பிரிப்பர். பேச்சொலிக் குரிய காற்று வாயறையில் தடுக்கப்பட்டால் மெய் யொலிகளும் தடுக்கப்படாவிட்டால் உயிரொலிகளும் பிறக்கும். உயிர் ஒலிகளின் பிறப்பை விளக்குவதற்கு மூன்று முறைகள் பயன்படுத்தப்படுகின்றன: (i) இயங்கும் ஒலிப்பானாகச் செயல்படும் நாக்கின் பகுதி. (ii) நாக்கு அண்ணத்தை நோக்கி எழுகிற உயரத்தின் அளவு. (iii) இதழ் அமைப்பு. அண்ணத்தை நோக்கி எழுகிற நாக்கின் பகுதியையொட்டி உயிரொலிகளை முன்னுயிர்கள் (front vowels), நடுவுயிர்கள் (central vowels), பின்னுயிர்கள் (back vowels) என வகைப்படுத்துவர். நாக்கு அண்ணத்தை நோக்கி உயர்கிற உயரத்தையொட்டி மேல் (high), இடை (mid), கீழ் (low) என்று மூன்று பெரும் பிரிவாகவும் மேலை, மேல் (high), கீழ் மேல் (lower high) எனவும், இடையை மேலிடை (higher mid), நடு இடை (mean mid), கீழ் இடை (lower mid) எனவும், கீழை, மேல்கீழ் (higher low) கீழ் (low) எனவும் பிரிப்பர். இதழ்களின் அமைப்பையொட்டி இதழ்குவி

# 2

# மொழி வரலாற்றுச் சான்றுகள்

மொழி வரலாறு என்பது மொழியில் காலந்தோறும் ஏற்படும் மாற்றங்களாகும். மொழி ஆய்வு பண்டைக் காலந்தொட்டே நடந்து வந்தாலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் அறிவியல் அடிப்படையில் அணுகுகின்ற முறை தொடங்கப்பட்டது. அறிவியல் துறையில் ஏற்பட்ட விரைவான மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் போல, மொழியியல் துறையிலும் ஏற்படலாயிற்று. உயிரினங்களின் தோற்றம், வளர்ச்சி பற்றி டார்வினின் பரிணாமக் கொள்கை, இயற்கை மொழிகளின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய வழி வகுத்தது. மொழி வளர்வது பரிணாம வளர்ச்சியாலும் (evolution), கடன் வாங்கலாலும் (diffusion) என்பர் வரலாற்று மொழியியல் பேரறிஞர்கள். மொழி காலத்துக்குக் காலம் மாற்றமடைந்து கொண்டே இருக்கின்றது. ஒரு மொழியில் பல்வேறு காலங்களில் அடைந்த மாற்றத்தைக் காலமுறைப்படி ஆராய, பல சான்றுகள் தேவைப்படுகின்றன, சான்றுகள் இன்றி அமையும் வரலாறுகள் வரலாறுகள் ஆகா. அறிவியல் அடிப்படையிலமைந்த ஆராய்ச்சியினைச் சான்றுகள் கொண்டு ஆராயப்பட வேண்டும். தமிழ் மொழி வரலாற்றை அறிய இலக்கியங்கள், இலக்கணங்கள், அகராதிகள், கல்வெட்டுக்கள், பிறமொழிக் கல்வெட்டுக்கள், அயல்நாட்டார் குறிப்புக்கள், கிளைமொழிகள் போன்றவற்றை அடிப்படைச் சான்றுகளாகக் கொள்ளலாம். இவ்வடிப்படைச் சான்றுகள் தமிழ்மொழி வரலாற்றிற்கு உதவும் வகையை ஆராய்வோம்.

## 1. இலக்கியங்கள் (Literatures):

ஒரு நாட்டின் வரலாற்றிற்கும் மொழியின் வரலாற்றிற்கும் இன்றியமையாத சான்று இலக்கியமாகும். மொழி வரலாற்றிற்கு எழுதப்பட்டவை எல்லாம் சான்றுகளாகக் கருதப்படுகின்றன. சங்ககால இலக்கியங்களை வைத்துச் சங்கத் தமிழைப் பற்றி ஆராய்கிறோம். அந்தந்தக் காலத்தில் எழுந்த இலக்கியங்களை வைத்து அந்தந்தக் கால மொழியைப் பற்றி அறிகிறோம். இலக்கியச் சான்றுகளை இருவகையாகப் பகுக்கலாம். இலக்கிய நடையிலமைந்த செய்யுள் நூல்கள் ஒரு வகை. இவற்றை எழுத்திலக்கியம்

Scanned by TapScanner

அதுபோல மொழிக்கு இடையில் வருகின்ற உகரமும் இகரமா கின்றது.

அருமை > அரிமை
சிறுமொழி > சிறிமொழி
சிறுஇலை > சிறிஇலை

தென்பாண்டி நாட்டில் சொல்லின் முதலில் இயல்பாக இன்று எழுகின்ற எடுத்தலோசை இல்லாமையால் மொழி முதலில் மெய்யெழுத்தோடு வரும் குறில்கள், நெடிலின் முன் ஒலி இழந்து நிற்கின்றன.

புறா > ப்றா
பலா > ப்லா

மொழி முதலில் மெய் வாராமையால் இந்த வல்லெழுத் துக்கள் பின்னே இகரம் பெறுகின்றன.

ப்றா > பிறா
ப்லா > பிலா

இந்த வழக்கிற்கேற்ற போன்று பல சொற்கள் மகாபுராண அம்மானையில் வருகின்றன.

17 ஆவது நூற்றாண்டு பேச்சுத் தமிழைப் பற்றி இராமப் பய்யன் அம்மானை மூலம் அறிகிறோம். அத்துடன் மதுரை, இராமநாதபுர வட்டார வழக்கையும் அறிகிறோம்.

| | | |
|---|---|---|
| அடைக்காய் | - | பாக்கு |
| வெள்ளிலை | - | வெற்றிலை |
| சம்பாரம் | - | சாக்கு |
| விதனம் | - | செய்தி |
| மன்னாப்பு | - | மன்னிப்பு |
| கலன்னை | - | ஜீனி |

தமிழ் இலக்கியங்கள் பழைய மரபின் வழிவந்த எழுத்துக் களால் எழுதப்பெற்று வருகின்றன. வரிவடிவம் பழைய ஒலிப்பு முறையைக் காட்ட வல்லதாக இல்லை. இத்தகைய சான்றுகளுக் கிடையே மொழியியலார் தம் ஆய்வை விழிப்புடன் நிகழ்த்த வேண்டும். எனினும் இருவகை இலக்கியங்களும் மொழி வரலாற் றிற்குத் தக்க சான்றுகளாக அமைந்துள்ளன.

## 2. இலக்கணங்கள் (Grammars):

தமிழ்மொழி வரலாற்றிற்கு இலக்கியத்தைப் போலவே இலக் கணங்களும் சான்றாகும். இலக்கியம் மொழி இயல்பை ஆராய்வதற்கு அடிப்படையானதாகும். இலக்கணம் நேரடியாக மொழி இயல்பைக் கூறுவதாகும்.

Scanned by TapScanner

(Written literature) என்றும் கூறுவர். இவ்விலக்கியங்கள் மரபுகளாலும் மரபுத் தொடர்களாலும் அமைந்திருக்கும். பேச்சு வழக்கை அடிப்படையாகக் கொண்ட வாய்மொழி இலக்கியங்கள் (Folk literature) மற்றொரு வகையாகும். வாய்மொழி இலக்கியங்களே உண்மையான மொழியின் இயல்பைக் காட்டுவனவாகும். மொழி பேசும் சமுதாயம் என்பது படித்தவர்களும் படியாத பாமரர்களும் அடங்கியதாகும். ஆகவே வாய்மொழி இலக்கியங்கள் பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழியின் இயல்பைக் காட்டுகின்றன.

தொல்காப்பியம் தமிழில் தோன்றிய மிகப் பழமையான இலக்கணம். சிலப்பதிகாரம் தொல்காப்பியத்துக்குப் பின் தோன்றிய காப்பியம். இவ்விரண்டு நூல்களையும் ஒப்பிட்டு, நோக்கின் மொழி வளர்ச்சி தெள்ளத் தெளிவாக விளங்கும். தொல்காப்பியம் எதிர் காலத் தன்மைஒருமை விகுதியாக 'அல்' என்பதைக் கூறுகின்றது. (தொல். சொல். 200) சிலப்பதிகாரகாலத்தில் 'அல்' ஈறு 'அன்' ஈறாக மாறிய நிலையைக் காண்கிறோம். மருங்கொலி (lateral) மூக்கொலியாக மாறியைதச் சிலம்பு மூலம் அறிகிறோம். கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த திருநாவுக்கரசர் தேவாரம் தமிழ் வட மொழியோடு இயல்புக்குத் தக வழங்கியமையையும் காண்கிறோம்.

| | | |
|---|---|---|
| பிரளய | > | பிரளயம் |
| க்ஷமி | > | சமி |

இவற்றால் திருநாவுக்கரசர் தேவாரம் வடமொழி ஒலிகளைப் பயன்படுத்திய முறையைத் தெரிவிக்கிறது. சங்ககால இலக்கியங்களையும் சங்க மருவிய கால இலக்கியங்களையும் ஒப்பிட்டு நோக்கின், நிகழ்கால இடைநிலை 'கின்று' 'கிறு' சங்க மருவிய கால இலக்கியங்களில் அதிகம் பயின்று வருவதைக் காண்கிறோம். சங்க இலக்கியங்களில் பரிபாடலில் நிகழ்கால இடைநிலை பற்றி அறிகிறோம். சங்ககாலத் தமிழுக்கும் சோழர்காலத் தமிழுக்கும் உள்ள வேறுபாட்டை இவ்விரு கால இலக்கியங்கள் மூலம் நன்கு அறிகிறோம்.

17 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே பேச்சுத்தமிழ் முழுக்க முழுக்க இலக்கியத்தில் இடம் பெறலாயின. இராமப்பய்யன் அம்மானை, சிவகெங்கை சரித்திரம், மாகபுராண அம்மானை, பொன்னுருவி மசக்கை போன்ற வாய்மொழி இலக்கியங்கள் அச்சிடப்பட்டன. மாகபுராண அம்மானை பதினொட்டம் நூற்றாண்டுத் தமிழின் ஒலி வகையின் சிறப்பியல்புகளைக் கூறுகின்றது. குற்றியலுகரம் சிலபோது குற்றியலிகரம்போல ஒலிக்கிறது.

| | | |
|---|---|---|
| புக்கு | > | புக்கி |
| இருபத்து | > | இருபத்தி |

# 3

# தொல்திராவிட மொழியும் தமிழும்

திராவிட மொழிகள் அனைத்தும் ஒரு மூலமொழியிலிருந்து பிறந்து வளர்ந்தவைகளாகும். மொழிக் குடும்பம் என்பது தொல் மொழி (Proto language) ஒன்றிலிருந்து பிரிந்து காலத்தாலும் இடத்தாலும் வெவ்வேறு மாற்றமடைந்து ஒரு பிரிவு மொழியும் மற்றொரு பிரிவு மொழியும் வெவ்வேறு மொழியெனக் கருதும் பல மொழிகளின் தொகுதியாகும். இம்மொழிகளை இன மொழிகள் (Cognate languages) என்பர். இம்மொழிகளை ஒப்பிட்டு ஆராய்ந்து இவையனைத்தும் தொல்மொழி ஒன்றிலிருந்து பல்வேறு மொழி களாகக் கிளைத்திருக்க வேண்டும் என ஒப்பியல் ஆய்வு மொழி யியலாளர்கள் கூறுவர். எல்லாத் திராவிட மொழிகளுக்கும் மூலமாக இருந்த மொழியினை மூலத்திராவிட மொழி அல்லது தொல் திராவிட மொழி (Proto Dravidian language) என வழங்கினர். தொல் திராவிடம் என்னும் ஒரு மொழி வழக்கில் இருந்திருக்க வேண்டு மென ஊகிக்கப்படுகிறது.

வான்சிலேகல் என்ற ஜெர்மானிய மொழியியல் அறிஞர்தாம் முதன் முதலாக ஒப்பிலக்கணம் என்ற சொல்லைத் தமது நூலில் பயன்படுத்தினார். இன்றைய ஒப்பு மொழியியலுக்கும் வரலாற்று மொழியியலுக்கும் வித்திட்ட பெருமை ரஸ்க் (Rask) பாப் (Bopp), கிரீம் (Grimm) ஆகியோரைச் சாரும். கி.பி. 1837 இல் பென்பே என்பார் மீட்டுருவாக்கத்தின் (Reconstruction) இன்றியமையாமை யைப் பற்றிப் பேசி இருந்ததும் அது சிலேகல் காலத்தில்தான் நடைமுறைக்கு வந்ததும் இங்குக் குறிப்பிடத்தக்கவையாம். பாப் அவர்கள் இந்தோ-ஐரோப்பிய இலக்கணம் ஒன்று எழுதினார். கி.பி.1817இல் அடெலுங் (J.c. Adelung) என்பாரும் கி.பி. 1791இல் பல்லாஸ் (Pallas) என்பாரும் பல்வேறு மொழிகளிலிருந்து சொல் அட்டவணைகளைத் தயாரித்து இருந்தனர். இவ்வட்டவணைகள் பின்னர் ஒப்பிலக்கணம் எழுதுவதற்குத் துணையாக இருந்தன. கி.பி. 1896இல் வில்லியம் ஜோன்ஸ் (Willam Jones) சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீன் ஆகியவை ஒரே இனத்தைச் சார்ந்தவை என்ற கருத்தை வெளியிட்டார். கி.பி.1856 இல் கால்டுவெல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலை வெளியிட்டார். இம்

Scanned by TapScanner

மொழிகளைப் பற்றிய தெளிவான கருத்தைத் தந்ததுடன் திராவிட மொழிகள் என்ற பெயரில் மொழி நூல் ஒன்றை உலகம் அறியுமாறு செய்தார்.

உலகின்கண் காணப்படும் மொழிகளைப் பல நிலைகளில் ஒப்பிட்டு ஆராய்வர். உலக மொழிகள் பல தம்முள் இனத்தொடர்புடையன. அவற்றிடையே பொதுத்தன்மை மிகப் பலவாக இருப்பதால் அவற்றை ஓரின மொழிகள் (Cognate languags) அல்லது குடும்ப மொழிகள் (Family of language) எனக் கூறுவர். ஒரு குடும்பத்தின் பல்வேறு மொழிகளை ஒப்பிட்டு ஆராயும் முறையினைத் தான் ஒப்பியல் முறை (Comparative method) என்கின்றனர். இம்மொழிகள் ஓரினத்தைச் சார்ந்தனவாக இருப்பினும் இம்மொழிகளிலுள்ள சொற்களுக்கிடையே ஒருவிதமான ஒழுங்கான ஒப்பு ஒலி மாற்றம் (Regularity of Phonetic correspondence) இருக்க வேண்டும். ஒலி ஒழுங்குக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஒலி ஒற்றுமைக்கு (Phonetic similarity) அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. தொல்மொழி தன்மையால் மற்ற இனமொழிகளை ஒத்திருக்கும் சில மொழிகளில் தற்செயலாகக் காணப்படும் வடிவ ஒப்புவமையை அடிப்படையாகக் கொண்டு ஆராயக் கூடாது. ஒப்பியல் முறை என்ற கோட்பாட்டினை உருவாக்கி அனைத்து மொழிகளும் தொல்மொழி ஒன்றிலிருந்து உருவானவை என்றும் அத்தொல்மொழிச் சொற்கள் இன்ன வடிவில்தான் இருக்க வேண்டும் என்றும் சில நெறிகளை வகுத்துச் சென்றனர். செவி என்ற பொருளைத் தருகின்ற சொல் தொல் திராவிட மொழியில் கெவி எனக் காணப்படும் எனக் கூறுகின்றனர். இவ்வாறு உருவாக்குகின்ற நிலையினைத்தான் மீட்டுருவாக்கம் (Reconstruction) என்பர். தொல் வடிவங்களை உருவாக்குவதற்கும் மொழிகளுக்கிடையேயுள்ள உறவு முறையை நன்கு அறியவும் இவ்வொப்பியல் முறை துணை புரிகின்றது. பெரும்பான்மையான இனமொழிகளிடையே வழங்குவதை அடிப்படையாக வைத்துத் தொல் வடிவம் முடிவு செய்யப்படுகின்றது. ஆனால், சில நேரங்களில் குறைந்த வழக்குடைய சொல் வடிவங்களும் தொல் வடிவமாகக் (Proto-form) கருதப்படுகின்றன. பொதுவாக, ஒப்பியல் ஆய்வில் தொல்வடிவத்தை உருவாக்குகின்றோம்.

இவ்வொப்பாய்வின் விளைவாகத் திராவிட மொழிகளைத் தென் திராவிட மொழிகள், நடுத் திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என மூன்று பெரும் பிரிவாகப் பிரிப்பர்.

Scanned by TapScanner

(1961 ஆம் ஆண்டு மக்கட் கணிப்பு (Census)

**திராவிட மொழிகள்**

| தென் திராவிட மொழிகள் | நடுத் திராவிட மொழிகள் | வட திராவிட மொழிகள் |
|---|---|---|
| தமிழ் (30,465,442) | தெலுங்கு (37,645,439) | குருக் (1,132,931 ) |
| மலையாளம் (16,994,442) | கோண்டி (1,384,321) | மால்தோ(88,64 |
| கன்னடம் (17,305,629) | கூயி (510,907) | பிராகூய் (275,000) |
| குடகு (17,172) | கூவி (168,027) | |
| துளு (93 4,845) | கோலாமி(46,065) | |
| தோடா (765) | பர்ஜி (84,607) | |
| கோத்தா (862) | கதபா (8401) | |
| | கொண்டா (12,298) | |
| | நாயக்கி (1500) | |
| | பெங்கோ (1254) | |
| | மண்டா (1010) | |

திராவிட மொழி வழங்கும் இடங்ளைப் பற்றிக் காண்போம். திராவிட மொழிகளில்மிகப் பழமையான இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்னமேயே இலக்கிய இலக்கணங்களைக் கொண்ட தமிழ்மொழி தமிழ் நாட்டில் மட்டுமின்றிப் பர்மா, மலேசியா, சிங்கப்பூர், பீஜித்தீவு, இலங்கை, (ஸ்ரீ லங்கா), தென் ஆப்பிரிக்கா, பிரிட்டிஷ் கயானா, மடகாஸ்கர், திரினிடால் போன்ற நாடுகளில் பேசப்படுகின்றது. மலையாள மொழி கேரளத்தில் மட்டுமின்றி இலட்சத்தீவிலும் பேசப்படுகின்றது. கன்னட மொழி கர்நாடக மாநிலத்தில் பேசப்படுகின்றது. கர்நாடக மாநிலத்திலுள்ள குடகு மாவட்டத்தில் பேசப்படும் இம்மொழியைக் கொடகு, கூர்க்கி, கோதகி போன்ற பல பெயர்களால் வழங்குவர். துளு மொழி கர்நாடக மாநிலத்திலுள்ள மங்களூர்ப் பகுதியில் பேசப்படுகின்றது. கொடகு மொழியையும் துளு மொழியையும் இலக்கிய வளமில்லா மொழி வகையுள் (non-literary languages) அடக்குவர். தோடா மொழி தமிழகத்திலுள்ள நீலகிரி மாவட்டத்தில் தோடா பழங்குடி மக்களால் பேசப்படுவதாகும். இது திராவிட மொழிகளிலயே அதிக ஒலிகளைக் கொண்ட மொழியாகும். தோடா மொழியைப் போன்று கோத்தா மொழியும் நீலகிரி மாவட்டத்தில் வாழும் கோத்தா பழங்குடியினரால் பேசப்படுவதாகும். இவ்விரண்டு மொழிகளுக்கு மிடையே நெருங்கிய தொடர்பு உண்டு. நீலகிரி மாவட்டத்தில் இம் மொழிகளைத் தவிர பணியர் பழங்குடி மக்கள்

Scanned by TapScanner

4

# தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களின் மொழி

ஒரு நாட்டின் வரலாற்றில் கல்வெட்டுக்கள் இடம் பெறுவதைப் போல, ஒரு மொழியின் வரலாற்றிலும் அவை இடம் பெறுகின்றன. எத்தனையோ பழமையான மொழிகள் கல்வெட்டுக்களையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. எகிப்திய மொழி, உக்ரிடிக் மொழி, ஹிட்டைட் மொழி, பினீசிய மொழி போன்ற மொழிகள் அனைத்தும் கல்வெட்டுக்களிலே வாழ்பவை. இத்தகைய கல்வெட்டுக்கள் பழம் பெரும் வரலாறுகள் பலவற்றைப் பறை சாற்றி நிற்பதுடன் அவை எழுதப்பட்டிருக்கும் மொழியின் தன்மையையும் காட்டி நிற்கும். பல்வேறு நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் ஒரு மொழி எவ்வாறு வளர்ந்து வந்தது என்றும் அம்மொழியில் எத்தகைய மாற்றங்கள் உண்டாயின என்றும் இலக்கிய மொழிக்கும் பேச்சு மொழிக்கும் இடையே என்னென்ன மாறுபாடுகள் இருக்கின்றன என்றும் சுட்டிக் காட்டுவனவாக அமைகின்றன. தமிழ் மொழியில் பல்லாயிரக் கணக்கான கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றுள் மிகப் பழமையானவை பிராமிக் கல்வெட்டுக்களாகும். இக்கல்வெட்டுக்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்பர். கீழ வளைவு, மறுகால் தலை, ஆனைமலை, அழகர்மலை, மேட்டுப்பட்டி, முத்துப்பட்டி, சித்தன்னவாசல், திருவாதவூர், விக்கிரமங்கலம், திருப்பரங்குன்றம், மாங்குளம், கருங்காலக் குடி, புகளூர், அரசலூர், மாமண்டூர் போன்ற பல இடங்களில் இக்கல்வெட்டுக்களைக் காணலாம். மாங்குளம் கல்வெட்டு முன்னைய எழுத்து வடிவிற்கும், புகளூர்க்கல்வெட்டு பின்னைய எழுத்து வடிவிற்கும் சான்றாகும்.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் பேரரசர் அசோகர் ஆண்ட பொழுது தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் பௌத்த சமயம் பரவிற்று . சமணம், பௌத்தம் ஆகிய இரண்டு சமயங்களும் பரவுவதற்குக் காரணராக இருந்தவர்கள் அச்சமயத் துறவிகளே. அச்சமயப் பரப்புநர்கள் அந்தந்த நாட்டு மொழிகளைக் கற்று அம்மொழிகள் மூலம் சமயத்தைப் பரவச் செய்தனர். பௌத்த, சமண சமயங்கள் தமிழகத்திலும் பரவின. அவர்களுடைய சமய நூல்கள் பிராகிருத மொழியில் இருந்ததாலும் அம்மொழி எழுத்துப் பிரா மியில் இருந்ததாலும், அவர்கள்மூலம் பிராமி

Scanned by TapScanner

எழுத்து தமிழகத்தில் நுழைந்தது. தமிழகத்தில் பௌத்த சமணத் துறவிகள் வாழ்ந்த இடங் கள் குகைகளாகும். குகைகளில் காணப்பட்ட கல்வெட்டுக்கள் பிராமி எழுத்தில் எழுதப்பட்டவையாகும். ஆனால், மொழியோ தமிழ்; சில சொற்கள், சொற்றொடர்களால் அமைந்தவை. குகை களில் காணப்பட்ட கல்வெட்டுக்களாதலால் இக்கல்வெட்டுக் களைக் குகைக் கல்வெட்டுக்கள் என்றும் தமிழ்ப் பிராமிக் கல் வெட்டுக்கள் என்றும் கூறுவர்.

தமிழ்நாட்டிலுள்ள மிகப் பழமையான குகைக் கல்வெட்டுக் கள் பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. 20 ஆம் நூற்றாண்டில் பாண்டி நாட்டில் பல குகைக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப் பட்டன. இக்குகைக் கல்வெட்டுக்கள் இலங்கையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள கல்வெட்டுக்களுடன் ஒத்துள்ளன. இரு நாடுகளிலும் காணப்படும் கல்வெட்டுக்கள் பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. வெங்கோபராவ் அவர்கள் கி.பி.1903 இல் கீழவளைவில் பிராமிக் கல்வெட்டைக் கண்டு பிடித்தார். கி.பி. 1906 இல் கெமைடு என்னும் ஆங்கிலேயர் மருகால் தலையிலுள்ள கல்வெட்டைக் கண்டுபிடித் தார். கே.வி. சுப்பிரமணிய அய்யர் பன்னிரண்டு இடங்களிலிருந்த முப்பது கல்வெட்டுக்களை ஆராய்ந்தார். இருபத்தொரு இடங் களிலிருந்த எழுபத்தொரு பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

இக்கல்வெட்டுக்களை ஆராய்ந்தபொழுது இவற்றில் ஒலிப் புடை ஒலிகளும் மூச்சுடை ஒலிகளும் காணப்படாமையை நோக்கி, இக்கல்வெட்டுகளின் மொழி தமிழ் என்றும் சில பிராகிருதச் சொற்கள் கலந்திருக்கலாம் என்றும் கருதினர். இக்கல்வெட்டுக் களில் காணப்படும் பிராகிருதச் சொற்களைக் கொண்டு பிராகிருத மொழிக் கல்வெட்டு என நாராயணராவ் கூறுகிறார். 'தமிழும் பிராமியும்' கலந்த மொழியில் எழுதப்பட்டுள்ளதாக டாக்டர் கே. கே. பிள்ளை கூறுகிறார். கல்வெட்டின் மொழி தமிழும் பிராகிரு தமும் கலந்தது என்றும் இலக்கண அமைப்புத் தமிழ் என்றும் கூறுகிறார் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார். பின்னர் இவரே 'எழுத்து பிராமி எனினும் மொழி தமிழ்' எனத் திட்ட வட்டமாகக் குறிப்பிடுகின்றார். கே.வி. சுப்பிரமணிய அய்யர் இவை தமிழ் எழுத்துக்களே என்றார். நாகசாமி போன்றோர் இதனைத் 'தமிழ்' என வழங்குகின்றனர். ஐராவதம் மகாதேவன் அவர்கள் குகைக் கல்வெட்டுக்களைத் தமிழ்க் கல்வெட்டுக்களாகக் கருது வதோடு, சங்க இலக்கியச் செய்திகள் இக்கல்வெட்டுக்களில் இடம் பெற்றிருந்தமையைச் சுட்டிக் காட்டுகின்றார்.

பிராமி இந்திய வரிவடிவங்களின் தாய் எனக் கருதப்படுகிறது. பிராமி எழுத்து முறையில் வட பிராமி, தென் பிராமி என இரு வகையுண்டு. தென்பிராமியைத் 'திராவிடி' என்றும் வழங்குவர்.

Scanned by TapScanner

தென்னிந்தியப் பிராமிக்கும் வட இந்தியப் பிராமிக்கும் வரிவடிவில் வேறுபாடு உண்டு. தமிழ்நாட்டுப் பிராமி எழுத்துக்களில் தமிழுக்கே தனிச் சிறப்பாக உள்ள ழ,ற,ன என்னும் எழுத்துக்களும் காணப்படுகின்றன. முன்பே வழக்கிலிருந்த எழுத்துக்களினின்றும்தான் அதைப் பெற்றிருக்க வேண்டும். தமிழ் மொழிக்கே உரிய ஒலிகள் உள்ளன. 'ஸ' என்னும் வட எழுத்தும் 'த' என்னும் வர்க்க எழுத்தும் காணப்படுகின்றன. மெய்யைக் குறிக்கப் புள்ளி பயன்படுத்தவில்லை. எ,ஒ, நெடில், குறில் வேறுபாடில்லை. குகைக் கல்வெட்டுக்களில் நீண்ட கோடு நெட்டுயிரையும் குறுகியகோடு குற்றுயிரையும் குறிக்கின்றன. கோட்டின் வேறுபாட்டில் எகர ஏகாரமும் ஒகர ஓகாரமும் வேறுபடுத்தப்படுகின்றன. 'G' என்ற வடிவம் 'ழ' கரம் என இனங் காணப்பட்டது. பிராமியில் % வடிவம் இகரம் என இனங் காணப்பட்டது. பிராமியில் n என்பது 'த' என இனங் காணப்பட்டது. 'ன' கரம் 'ந' கரமாகக் கல்வெட்டில் வெட்டப்பட்டுள்ளது. ஒலிப்புடை வெடிப்பொலிகளும் மூச்சுடை வெடிப்பொலிகளும் இக்கல்வெட்டுக்களில் காணப்படவில்லை. ஐ,ஔ, ஆயுதம் போன்ற உயிர்களும் காணப்படவில்லை. குழிந்துரசொலியும் பிறவிடங்களில் மூலத்திராவிட இடையண்ண வெடிப்பொலியாகவே மாறி விடுகின்றது. எல்லா மெய்யெழுத்துக்களும் காணப்படுகின்றன. ந,ன தனியாக ஒலியன்களாயினும் வேற்று நிலை வழக்கு காணப்படவில்லை. இதனால் குகைக் கல்வெட்டுக்களின் மொழி தமிழாகவோ மூலத்தென்திராவிடமாகவோ இருத்தல்வேண்டும் என ஊகிக்கப் படுகின்றது. இக்கல்வெட்டுக்களில் பிராகிருத மொழிக் கலப்பு மிகுதி. ஏனென்றால் பௌத்த-சமண சமயங்களை மேற் கொண்டவர்கள் பிராகிருத மொழியைக் கற்றனர். சீத்தலைச் சாத்தனார் போன்றவர்கள் பாலி மொழியையும் நன்கு கற்றிருந்தனர். மணிமேகலையில் பாலி மொழிச்சொற்கள் இடம் பெற்றுள்ளன. பிராகிருதச் சொற்கள் தமிழில் கலந்தமைக்குப் பிராமிக் கல் வெட்டுக்களும் சிலம்பு, மணிமேகலையும் சான்று பகர்கின்றன. கெ.வி. சுப்பிரமணிய அய்யர், எச். கிருட்டின சாஸ்திரி, சி. நாராயண ராவ், ஐராவதம் மகாதேவன், மயிலை சீனி. வேங்கடசாமி போன்றோர் இக்கல்வெட்டுக்களைப் படித்துப் பொருள் கூறியுள்ளனர். சில கல்வெட்டுக்களுக்கு ஒவ்வொரு வரும் ஒவ்வொரு விதமாகப் பொருள் கூறியுள்ளனர். பெரும்பாலான கல்வெட்டுக்களுக்கு ஓரளவு ஒரு முடிவுக்கு வந்துள்ளனர். மேலும், புதிய ஒளி கிடைக் கின்ற வரை, உள்ளவற்றை ஆராய்வோம். இங்குச் சில குகைக் கல் வெட்டுக்களைப் பற்றிக் காண்போம்.

1. அரிட்டாபட்டி கல்வெட்டு

'கணிஇ ந தா ஸீரியகுவ
வெள் அறைய் நிகமது
காவி தி இய் காழி திக அந்தை அ
ஸதன் பிணாஊ கொடுபி தோன்.



Scanned by TapScanner

# 5

# தொல்காப்பியத் தமிழ்

தமிழில் காணப்படும் மிகப் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம். இந்நூல் தோன்றுவதற்கு முன்பே விரிந்த இலக்கியப் பரப்பு இருந்திருக்க வேண்டும். இத்தகைய சூழ்நிலையில்தான் தொல்காப்பியம் போன்ற நூல்கள் உருவாகியிருக்க முடியும். திராவிட மொழிகளிலே இந்நூல் மிகப் பழமையான நூலாகக் கருதப்படுகின்றது. எழுத்து சொல், பொருள் என்ற அதிகாரங்களையும் அவற்றில் கூறப்படும் செய்திகளையும் நோக்கின் இவ்வாசிரியரின் நுண்மாண் நுழை புலத்தை நன்கு அறியலாம். ஒரு மொழியினை எவ்வாறு ஆராய்வது என்பதிலும் ஆராய்ந்த செய்தியினை எவ்வாறு விளக்குவது என்பதிலும் இவ்வாசிரியரின் கூர்த்த மதியினைக் காண்கிறோம்.

தொல்காப்பியரின் காலத்தைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. மறைமலையடிகள், வெள்ளைவாரணர் போன்றோர் இறையனார் களவியல் உரை வழி நின்றும் அகச்சான்று புறச்சான்று வழி நின்றும் தொல்காப்பியர் காலம் கி.மு.5000 ஆண்டுகட்கு முற்பட்டது எனக் கூறுகின்றனர். வடமொழியில் அஷ்டாத்யாயி என்னும் இலக்கணத்தை வகுத்த பாணினியின் காலத்துக்கு முற்பட்டவர் தொல்காப்பியர் என்கிறார் டாக்டர் சோமசுந்தர பாரதி அவர்கள். கி.மு. 3ஆம் நூற்றாண்டு என்கிறார் இராகவையங்கார் அவர்கள். தொல்காப்பியர் காலம் கி.மு.200-100 என்கிறார் டாக்டர் பி.சா.சுப்பிரமணிய சாஸ்திரி அவர்கள். கி.பி. 5 ஆம் நூற்றாண்டு என்கிறார் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள். தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியங்களையும் நுணுகி நுணுகி ஆராய்ந்தவர்கள் தொல்காப்பியத்தைச் சங்க இலக்கியங்களுக்கு முற்பட்டது என ஆணித்தரமாக வாதிட்டு நிறுவுகின்றனர். தொல்காப்பியத் தமிழின் இயல்புகள், சங்க இலக்கிய மொழி அமைப்பு ஆகியவற்றை நுணுகி ஆராயும்போது, தொல்காப்பியம் சங்க இலக்கியத்திற்கு முற்பட்டதாக உள்ளது என்பதை அறிகிறோம்.

தொல்காப்பியத்தின் பகுப்புமுறை இன்றைய மொழியியலாரின் பகுப்பு முறையைப் பெரிதும் ஒத்துள்ளது. மொழியியலார் ஒரு மொழிக்கு இலக்கணம் எழுதும்போது முதலில் அதன் ஒலியன்

Scanned by TapScanner

களையும் ஒலியன்கள் புணர்ச்சியில் அடையும் மாற்றங்களையும் உருபன்களையும் தொடரமைப்பை பற்றியும் வரிசையாக விளக்கு வர். இவற்றை எழுத்தியல் (phonology.) புணரியல் (morphophone mics), உருபனியல் (morphology), தொடரியல் (syntax) என்றும் கூறலாம். தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் எழுத்தியல், புணரியல் பற்றியும் சொல்லதிகாரத்தில் உருபனியல், தொடரியல் பற்றியும் கூறியுள்ளார். எழுத்துக்களின் வரன்முறை பற்றிக் கூறும்போது,

'ரகார ழகாரம் குற்றொற் றாகா' *(49)*

ரகாரமும் ழகாரமும் தனிக் குற்றெழுத்தையொட்டி மெய்யெ ழுத்தாக வாரா என்பது தமிழ் மொழியின் அமைப்பை எந்த அள விற்கு நுணுகி ஆராய்ந்துள்ளார் என்பதைப் புலனாக்கும். பண்டைய இலக்கண ஆசிரியர்களும் தற்கால மொழியியலார் போன்றே மொழியினை வகுத்தும் தொகுத்தும் ஆராய்ந்ததுள்ளனர். இன்றைய மொழியியல் வளர்ச்சியின் வித்து தொல்காப்பியத்தில் உள்ளது எனின் அது மிகையாகாது.

தொல்காப்பியரின் ஒலியியல் கொள்கையும் ஒலியுறுப்புக்கள், ஒலிக்கும் முறை, ஒலிகளின் பாகுபாடு ஆகியவை பற்றிய அவரது அறிவாற்றலும் இன்றைய மொழியியலாரும் வியக்கும் வண்ணம் உள்ளது. தொல்காப்பியர் ஒலியன் பற்றிய கொள்கையுடையவர் என் பதையும் ஊகித்தறிய முடிகின்றது. முதல் எழுத்து, சார்பு எழுத்து இதனை மேலும் உறுதிப் படுத்துகிறது.

ஒலியியல், உச்சரிப்பொலியியல் (Articulatory phonetics), பௌதிக ஒலியியல் (Acoustic Phonetics), கேட்பொலியியயல் (Auditory phonetics) என மூன்று வகையாகும். தமிழ் ஒலிகளின் பிறப்புப் பற்றித் தொல்காப்பியர் பிறப்பியலில் தெளிவாக விளக்கி யுள்ளார். தொல்காப்பியர் பிறப்பியலில் ஒலிப்பான்களையும் (articulators), ஒலிப்பு முனைகளையும் (Piont of articulation), ஒலிப்பு வகைகளையும் (manner of articulation) அடிப்படையாகக் கொண்டு தமிழ் ஒலிகளை விளக்கியுள்ளார். நா, இதழ் முதலிய இயங்கும் உறுப்புக்கள் ஒலிப்பான்களாகும்.

இவ்வுறுப்புக்கள் தொடுகின்ற பல், அண்ணம் ஒலிப்பு முனை கள் எனப்படும். அங்காத்தல், ஒற்றல். வருடல், அணருதல் என்பன ஒலிப்பு முறைகளை விள்க்கும் தொடர்களாகும். தொல்காப்பியர் முதற்கண் பன்னிரண்டு உயிர்களையும் பின் பதினெட்டு மெய் களையும் பிறப்பிடம் கூறி விளக்குகிறார். அடுத்துக் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தல் என்ற மூன்று சார்பெழுத்துக்களையும் கூறி னார். தொல்காப்பியர். 'எழுத்து' என்ற சொல்லைப் பயன்படுத்து கிறார். இதனை 'எழுது' என்ற பொருளிலும் 'ஒலியெழுப்பு' என்ற பொருளிலும் பயன்படுத்துகிறார். எழுத்துக்களின் ஒலி அளவைக் காட்ட மாத்திரைகளையும் சுட்டுவர். உயிரொலிகளின் தோற்றத்

Scanned by TapScanner

தைக் கூறும்போது செயல்பாட்டை 'இயலும்' (85,87) என்ற சொல்லாலும் மெய்யொலிகளின் தோற்றத்தைக் கூறும் போது 'பிறக்கும்' (92,99) என்ற சொல்லாலும் குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியர் பன்னிரு உயிர்களின் பிறப்புப் பற்றிப் பேசுகையில் 'மிடற்றுப் பிறந்தவளி' என்ற தொடரைப் பயன்படுத்துகிறார். ஒலி உறுப்புக்கள் ஏற்படுத்தும் ஒலி அதிர்வுகளே 'மிடற்றுப் பிறந்த வளி' என்ற சொல்லால் சுட்டப்படுகின்றன. 'இசைக்கும்' என்பதால் இஃது ஒலிப்புடை ஒலி என்று உணரலாம். ஒலிப்பு முறையை அடிப்படையாக வைத்து உயிர் எழுத்துக்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

(i) அ, ஆ
(ii) இ,ஈ,எ,ஏ,ஐ
(iii) உ,ஊ,ஒ,ஓ,ஔ

தொல்காப்பியர் பிறப்பியலில் எழுத்துக்களின் பொதுப் பிறப்பைக் கூறியபின், உயிர் எழுத்துக்களின் பிறப்புப் பற்றிக் கூறுகிறார். உயிர் எழுத்துக்களின் பொதுப் பிறப்புப் பற்றியும் உயிர் எழுத்துக்களின் சிறப்புப் பிறப்புப் பற்றியும் விளக்குகிறார்.

அவ்வழிப்
பன்னீ ருயிரும் தம்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்.'- பிறப்.2.

'அவற்றுள்
அ ஆ ஆயிரண்டு அங்காந்து இயலும்.' -பிறப்.3

'இ ஈ எஏ ஐஎன இசைக்கும்
அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன
அவைதாம்
அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய.' -பிறப்.4

'உ ஊ ஒ ஓ ஔஎன இசைக்கும்
அப்பால் ஐந்தும் இதழ்குவிந்து இயலும்.'- பிறப்.5

அகரமும் ஆகாரமும் வாயைத் திறத்தலாலே பிறக்கின்றன. இவற்றைக் கீழ் நடு உயிர் (low central vowels) என்பர். அ,ஆ, இவ்விரண்டும் அங்காப்புயிர் (பிறப்.3), என்றும், இ, ஈ, எ, ஏ, ஐ முன்னுயிர்கள் (front vowels) என்றும் (பிறப்.4), உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகியவை குவியுயிர் (பிறப்.5) என்றும் விளக்கப்பட்டுள்ளன. அ முதலியவற்றை அங்காப்புயிர் என்றமையால் மற்றவை மூடுயிர் (close vowel) என்பது பெறப்படுகின்றது. 'அ' இன உயிர்களை அங்காப்புயிர் என்று பிரித்தமையாலும் 'இ' இன உயிர்களை முன்னுயிர் (front vowels) என்றமையாலும், 'உ' இன உயிர்கள் பின்னுயிர் (back vowel) என்பதும் 'அ' இன உயிர்கள் நடுவுயிர் (central vowel)

# 6

# சங்ககாலத் தமிழ்

சங்க இலக்கியம் என்று சிறப்பாகக் குறிக்கப் பெறுவன எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். மொழி வரலாற்றில் இக்காலப் பகுதியைப் 'பழந்தமிழ்க் காலம்' என்பர். பேராசிரியர் டாக்டர் ச. அகத்தியலிங்கம்[1] அவர்கள் பழந்தமிழ்க் காலத்தை 'முன் பழந்தமிழ்', 'பின் பழந்தமிழ்' என இரண்டாகப் பிரிக்கின்றார். சங்க காலத் தமிழை முன் பழந்தமிழ்க் காலமென்றும் சங்கமருவிய காலத் தமிழைப் பின் பழந்தமிழ்க் காலமென்றும் கூறுகிறார். திருக்குறள், சிலப்திகாரம், மணிமேகலை முதலியன சங்க மருவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்களாகும். இக் காலத்தைச் சங்க மருவிய காலம் என்று அறிஞர் வழங்குவர். பழந்தமிழ் நூற்களில் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு ஆகிய நூல்களுக்கும் எட்டுத் தொகையைச் சார்ந்த பரிபாடல், கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களுக்குமிடையே மொழி நிலையில் பல வேறுபாடு களைக் காணலாம். எட்டுத் தொகையைச் சாந்தபரிபாடலும், கலித் தொகையும் பிற சங்க நூல்களினின்றும் மொழி நிலையில் மாறு பட்டு நிற்பதை அறிஞர்கள் பலர் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். எல். வி. இராமசாமி அய்யர், வையாபுரிப் பிள்ளை, தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், செ.வை. சண்முகம், கமில் சுலவபில், ச. அகத்தியலிங்கம் ஆகியோர் இதே கருத்தினைத்தான் கொண்டுள்ளனர். எனவே, பழந்தமிழ் நூல்களை முன்பழந்தமிழ் நூற்கள் என்றும் பின்பழந் தமிழ் நூற்கள் என்றும் பிரித்து முன்பழந்தமிழ் நூல்களில் பதிற் றுப்பத்து, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு ஆகிய நூல்களும் பின்பழந்தமிழ் நூல் களில் பரிபாடல், கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களும் அடங்கும் என்பதும் தெரியவரும். முன்பழந்தமிழ் சங்க காலத் தமிழ் என்னும் பெயரிலும், பின்பழந் தமிழ் சங்க மருவிய காலத் தமிழ் என்னும் பெயரிலும் இங்கு ஆராயப்பட்டுள்ளன. பண்டைத் தமிழ்க் கூறுகளைப் பற்றி எல்.வி. இராமசாமி அய்யர், வையாபுரிப்பிள்ளை, தெ. பொ. மீனாட்சி

1. ச. அகத்தியலிங்கம்: சங்கத்தமிழ்-1, பக்.62-65. 117 அண்ணா மலை நகர், 1983.

Scanned by TapScanner

சுந்தரனார், கமில் சுவலபில், செ. வை. சண்முகம், வ. சுப. மாணிக்கம், சோ. ந. கந்தசாமி, தி. நடராசன், சாரங்கபாணி, க. பால சுப்பிரமணியம், பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் போன்றோர் ஆராய்ந்துள்ளனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் சங்கத் தமிழ் பற்றி மூன்று தொகுதிகளை வெளியிட்டுள்ளார். அடுத்து இன்னுமொரு மூன்று தொகுதிகள் வெளிவர உள்ளன.

இதைத் தவிர பல ஆய்வேடுகள் சங்க இலக்கிய மொழியமைப்பை அலசி ஆராய்ந்துள்ளதும் இவண் குறிப்பிடத்தக்கது. 'சங்கம்' என்ற சொல் மணிமேகலையில் (7.113) தான் முதன்முதலில் வழங்குகிறது. 'இலக்கியம்' என்ற சொல்லும் பிற்காலத்தே தான் பயிலப்பட்டு வந்தது. எனவே, 'சங்க இலக்கியம்' என்ற தொடர் பிற்காலத்தவரால் புனையப் பெற்றதாகும்.

தொல்காப்பியத்தமிழில் காணப்பட்ட கூறுகள் சங்க காலத் தமிழில் காணப்படுகின்றன. சில மாற்றங்களைத் தவிர சங்க காலத் தமிழ் முழுக்க முழுக்க தொல்காப்பியத் தமிழாகும். சங்க இலக்கியத்தில் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் மொழி முதலில் வந்துள்ளன. மெய்யெழுத்துக்களுள் க, த, ப, ம, என்னும் ஐந்து மெய்யெழுத்துக்களும் எல்லா உயிர் எழுத்துக்களோடும் இணைந்து மொழி முதலில் வரும் எனத் தொல்காப்பியர் கூறுகிறார். சங்க இலக்கியத்திலும் இவ்வைந்து மெய்யெழுத்துக்களோடு எல்லா உயிர்களும் இணைந்து மொழி முதல் வந்துள்ளன. சகரம் அ, ஐ, ஔ என்னும் மூன்று நீங்கலாக ஒன்பது உயிர் எழுத்துக்களோடு இணைந்து மொழி முதலில் வரும் (தொ. எ. 62). சங்க இலக்கியத்தில் ஒன்பது உயிர்களுடன் மட்டுமின்றி அகரத்தோடும் ஐகாரத்தோடும் இணைந்து மொழி முதலாகிறது. வகரம் உ, ஊ, ஒ, ஓ, என்னும் உயிர்கள் ஒழிந்த ஏனைய எட்டு உயிர்களோடு இணைந்து மொழி முதலில் வரும் என்று தொல்காப்பியம் கூறுவது போன்று, சங்க இலக்கியத்திலும் வருகின்றன.

வடுகர் - நற். 212.
வாடை - நற். 5.
விரல் - அக. 34.
வீரர் - அக. 36.
வெகுளி - பொருந. 172.
வேந்தன் - அக. 24.
வையை - மது. 356.

சங்க இலக்கியத்தில் ஞகரம் 'அ எ ஒ' வோடு இணைந்து மொழி முதலில் வருவதுடன் 'அ இ' யோடு இணைந்தும் மொழி முதலாகிறது.

Scanned by TapScanner

ஞரல - பதிற். 30.
ஞிமிறு - புறம். 93.

யகரம் ஆவோடு மட்டுமல்லாது அகரத்தோடும் ஊகாரத் தோடும் இணைந்து மொழி முதலில் வந்துள்ளது.

யவனர் - அக.149.
யூபம் - பதிற். 67

பிற உயிர்களுடன் இணைந்து மொழி முதல் வருவது வடமொழித் தொடர்பால் ஏற்பட்டிருக்கலாமெனப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்[1] கருதுகின்றார்.

பதினொரு உயிர் எழுத்துக்களும் சங்க இலக்கியத்தில் மொழி இறுதியில் வருகின்றன. 'ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள, என்னும் பதினொரு மெய்களுள் ஞகரம் தவிர ஏனைய பத்தும் சங்க இலக்கியங்களில் மொழிக்கு இறுதியாக வந்துள்ளன. உரையாசிரியர்கள் 'உரிஞ்' என்னும் சொல்லை உதாரணம் காட்டுகின்றனர்.

தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ம் மயக்கங்கள் சிலவற்றைத் தவிர அனைத்து மெய்ம் மயக்கங்களும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. உடம்படுமெய்யான யகர வகரங்களின் வருகை சங்க காலத்தில் மிகுதியாகும். இதனால் உயிர் மயக்கங்கள் தவிர்க்கப் பட்டன.

'செய்யு ளிறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற் றாகும்.' - (தொ. எ. 51)

'போலும்' என்ற சொல் 'போன்ம்' என்றாகும் என்பர். சங்க இலக்கியங்களில் வேறு சில சொற்களையும் காணலாம்.

சான்ம் - மலை 313; நற். 381.
தின்ம் - புற. 150.

சங்க இலக்கியங்களில் வேறு சில மெய்களும் - 'ண்ம்' - 'ய்ம்' என்பனவும் சொல் இறுதியில் ஈரொற்றாய் அமைந்து வந்துள்ளன.

கொண்ம் - புற. 152
தேய்ம் - நற்.68

நன்னூலாரும் - ண்ம் ஈரொற்றாய் அமைந்து வருதலைக் குறிப்பிட்டுள்ளார்.

'லளமெய் திரிந்த ணனமுன் மகாரம்
நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே.' - (நன். 120)

1. T.P. Meenakshisundaran; A History of Tamil Language; p. 108.

Scanned by TapScanner

# 7

# சங்க மருவிய காலத் தமிழ்

பழந்தமிழை முன் பழந்தமிழ், பின் பழந்தமிழ் என இரண்டாகப் பிரிக்கிறோம். முன்பழந்தமிழைச் சங்க காலத் தமிழ் என்றும், பின் பழந்தமிழைச் சங்க மருவிய காலத் தமிழ் என்றும் வழங்குகிறோம். பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க கால நூல்களாகும். திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை சங்க காலத்தை அடுத்துத் தோன்றியவையாதலால், அவற்றைச் சங்க மருவிய கால நூல்கள் என்றும் அக்காலத்தைச் சங்க மருவிய கால நூல்கள் என்றும் கூறுகிறோம். எட்டுத்தொகையைச் சார்ந்த பரிபாடலும் கலித்தொகையும் மொழி நிலையில் பிற சங்க நூல்களினின்றும் மாறுபட்டு நிற்கின்றன. வினைச்சொற்களை ஆராய்ந்த எல்.வி. இராமசாமி அய்யரும் இதே கருத்தைத்தான் வெளியிட்டுள்ளார். வையாபுரிப்பிள்ளை அவர்களும் பல்வேறு காரணங்களைக்காட்டி, பரிபாடலும் கலித்தொகையும் சங்க இலக்கியங்களுக்குப் பிந்தியவை என்கிறார். தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரும் இவ்விரண்டு நூற்களும் சங்க காலத்தையடுத்துத் தோன்றியவை என்கின்றார். கமில் கவலபில் (Kamil Zvelebil) அவர்களும் சங்க இலக்கியங்களில் பரிபாடலும் கலித்தொகையும் பிந்தியது என்கிறார். செ. வை. சண்முகம் அவர்களும் 'சங்க இலக்கிய மொழி அமைப்பு' என்ற கட்டுரையில், பரிபாடல், கலித்தொகை சங்க நூல்களாயினும் பல புதுமைகளைக் கொண்டு விளக்குகின்றது என்கின்றார். மு. அருணாசலம் அவர்களும் பிற சங்க இலக்கியங்களுக்குப் பின்னரே பரிபாடலும் கலித்தொகையும் தோன்றின என்பார். பேராசிரியர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்களும் தமது 'சங்கத்தமிழ்' என்ற நூலில் பின் பழந்தமிழ்க் கூறுகள் பரிபாடலிலும் கலித்தொகையிலும் காணப்படுவதால், இவ்விரண்டு நூல்களையும் மொழியியல் அடிப்படையில் சங்க மருவிய கால நூல்களாகக் கருதுகின்றார். திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்கள் தனித்தனி ஆசிரியர்களால் இயற்றப்பட்ட நூல்களாகும். இவற்றைச் சங்க மருவிய கால நூல்கள் என்றே வழங்குவர். பரிபாடல், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களை மொழியியல் அடிப்படையில் ஆராய்ந்த அறிஞர்களும் இதே கருத்தைக் கொண்டுள்ளனர். டாக்டர் வ. சுப. மாணிக்கம், டாக்டர் சோ. ந. கந்தசாமி, டாக்டர்

| சங்கத்தமிழ் | | |
|---|---|---|
| என் | > | ஏன் |
| எம் | > | ஏம் |
| அன் | > | ஆன் |
| அள் | > | ஆள் |
| அர் | > | ஆர் |

**நெடில் குறிலாதல்**

ஆங்கு, ஈங்கு முதலிய சங்க காலச் சொற்கள் மணிமேகலையில் அங்கு, இங்கு என வருவதாகக் கூறுகிறார்.

| | | | |
|---|---|---|---|
| ஆங்கு | > | அங்கு | மணிமே. 19. 9, 28.116, 6.26, 14.84, 18.83. |
| ஈங்கு | > | இங்கு | மணிமே. 4.104,20. 123 21.10 23. 128, 25.10. 27.221 |

**தனிக்குறில் 'ர' கர 'ழ' கரம்**

'ர' கரமும் 'ழ' கரமும் குறில் கீழ் ஒற்றாக வாரா (தொல். என்ற விதி சங்கமருவிய காலத்துப் பொருந்தும். 'வர்த்தனை' என சிலம்பில் காணப்படும் சொல்லாட்சியைப் பேராசிரியர் வ.சு. மாணிக்கம் அவர்கள் எடுத்துக்காட்ட' மணிமேகலையில் காண படும் வர்த்தித்தல் (29-256), தெற்கு (45.2) போன்றவற்றைச் சோ.ந. கந்தசாமி அவர்கள் எடுத்துக்காட்டுகிறார்.

**சகர முதன் மொழிச் சொற்கள்**

தொல்காப்பியப்படி சகரம் மொழிமுதல் வாராது. ஆனா சங்க இலக்கியங்களிலும் சங்கமருவிய நூல்களிலும் சகரமுதன் மொழிச் சொற்கள் நிறைய வந்துள்ளன. சிலப்பதிகாரத்தில் சகட சண்பகம், சதுக்கம், சந்தனம், சந்தி, சதங்கை, சக்கரம், சகடம் சங்கமன் போன்ற சொற்களும் மணிமேகலையில் சம்பாபதி சரவணம், சனமித்திரன், சரண், சலம், சபக்கம், சண்பகம் போன்ற சொற்களும் காணப்படுவதாகப் பேராசிரியர் வ.சுப. மாணிக்கம் அவர்களும் சோ.ந. கந்தசாமி அவர்களும் எடுத்துக்காட்டுகின்றனர். மணிமேகலையில் சைகார முதற் சொற்களையும் காணலாம். சைமினி (27.82) சைவவாதி (27.87) சைதனியவான் (29.17) சங்கமருவிய நூலான பரிபாடலிலும் 'சையம்' (பரி 11.14) என்ற சொல் வந்துள்ளது.

**ரகரத்தின் முன் இகரம் வரல்**

ரகரச் சொற்களின் முன் 'இ' கரம் இணைந்து வருதலைக் காண்கிறோம்.

இராமன்-27.53.

Scanned by TapScanner

# 8

# பல்லவர் காலத் தமிழ்

தமிழ் மொழியைப் பண்டைத் தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத்தமிழ் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம் என முன்னர்க் கண்டோம். பேராசிரியர் அகத்தியலிங்கம் அவர்கள் இவற்றின் சில பல பண்புகளைக் கருத்தில் கொண்டு இவற்றை முறையே 'சங்கத்தமிழ்', 'தெய்வத்தமிழ்', 'வளரும் தமிழ்' என வழங்குவது மிகப் பொருத்தமாகும் என்கிறார். கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. பதினேழாம் நூற்றாண்டு வரை உள்ள காலப்பகுதியை இடைக்காலத் தமிழ் என்றும் வழங்குவர். காரைக்காலம்மையார் புராணம், தேவாரம், நாலாயிரத்திவ்யப் பிரபந்தம், கம்பஇராமாயணம், வில்லிபாரதம் போன்ற நூல்களில் காணப்படும் மொழி நிலைக்கும் பண்டைத் தமிழ் மொழி நிலைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. எனவேதான் இக்காலத் தமிழை இடைக்காலத் தமிழ் என்கிறோம். தேவாரம், நாலாயிரத்திவ்யப் பிரபந்தம் போன்றவை பக்திச் சுவை சொட்டச் சொட்ட எழுந்தவையாகும். எனவே, இக்காலத்தமிழைத் 'தெய்வத்தமிழ்' என்றும் வழங்குகிறோம். தமிழ் இலக்கிய வரலாற்றில் ஏராளமான இலக்கியங்கள் தோன்றிய காலமும் இதுவேயாகும். இக்கால இலக்கியங்கள் பொற்கால இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன.

இடைக்காலத் தமிழைப் பல்லவர் காலத் தமிழ், சோழர் காலத் தமிழ், நாயக்கர் காலத் தமிழ் என மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

பல்லவர்கள் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழகத்தை ஆண்டனர். இவர்கள் காலத்தில் தான் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தி இலக்கியங்களைப் பாடினர். இவ்விலக்கியங்கள் மட்டுமின்றி இக்காலக் கல்வெட்டுக்களும் பல்லவர் காலத் தமிழைப் பற்றி அறியப் பெரிதும் துணை செய்கின்றன.

சங்க காலத்தைப் போலவும் சங்க மருவிய காலத்தைப் போலவும் பல்லவர் காலத்திலும், இ எ உ ஒ அ, என்ற ஐந்து உயிர்களும் அவற்றிற்கினமான நெடில்களும் ஒலியன்களாக இருந்தமையை அறிகிறோம். எகரமும் ஒகரமும் தவிர ஏனைய உயிர்கள் சொல்லின்

சினை > சிஜெ
எல்லை > எல்லெ

அரைசர் > அரெசர் என்று சொன்னாலும், சொல்லின் இடையி லுள்ள எகரம் அகரமாகவே எழுதப்பெறும். ஆனால், சொல்லின் இடையில் எகரம் அகரமாக ஒலிக்கப்படவில்லை. அரெசா என்ற வடிவத்திலுள்ள அகரம் கீழ்நடு உயிர் (low central). ஆனால், சொல்லினிடையில் அகரம் முன் தாழ் இடை (front low mid) உயிராக மாறுகின்றது.

யகரம் கெடுதல் சங்கத் தமிழ், சங்கமருவிய காலத் தமிழ் மற்றும் பல்லவர் காலத்திலும் தொடர்கின்றது.

யாராலும் > ஆராலும் - திருவா. 8.2.
யானை > ஆனை - திருவா. 6.21.
யாக்கை > ஆக்கை - திருவா. 6.10

க்த் > த்த் : க்த் > த்த் எனப் பல்லவர் காலத்திலும் மாறுகின்றது

பக்தி > பத்தி - திருவா. 11.12.
முக்தி > முத்தி - திருவா. 11.12.

ற்ற் > த்த் : ற்ற் > த்த் என மாறுகின்றது.

பற்றேதும் > பத்தேதும் - திருவா. 10.5

கி.பி. எட்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களிலேயே இம் மாற்றங்களைக் காணலாம்.

ஆற்றுக் கால் > ஆத்துக் கால்
சேற்று நிலம் > சேத்து நிலம்

இருபதாம் நூற்றாண்டுப் பேச்சுத்தமிழிலும் ற்ற் > த்த் மாற்றங் களைக் காணலாம். பல்லவர் கால மாற்றம் இன்று நிலைத்து விட்டதைக் காண்கிறோம்.

பற்றேதும் > பத்தேதும்-திருவா. 10.5
பற்று வரவு > பத்து வரவு
கொற்றவன்குடி > கொத்தவன்குடி > கொத்தகுடி

மெய்யொலிகள்: ட,ற:

டகரம் நுனிநா அண்ணம் சேரப் பிறப்பதாகும். றகரம் நுனிநா அனரி அண்ணத்தைத் தொடுவதால் பிறப்பதாகும். எனவே, மேற்புற நுனிநா ஒலியே டகரமாகும். வளைநா ஒலியே றகரமாகும். ஆனால், இப்பொழுது வளைநா ஒலியான டகரம் தொல்காப்பியர் காலத்து வளைநா ஒலியாக (retroflex) இல்லை. தமிழ் வடமொழி யோடு மிகமிகப் பழகிய காலத்து வடமொழியிலுள்ள மூர்த்தாட் சரம் என வளர்ந்த டகரத்தின் வளைநா ஒலியே தமிழிலும் வந்

# 9

# சோழர் காலத் தமிழ்

பண்டைத் தமிழுக்கும் இடைக்காலத் தமிழுக்கும் இடையே வேறுபாடுகள் பலவற்றைக் காணமுடியும். இடைக்காலத் தமிழின் கூறுகளாகக் கருதப்படுபவைகளுள் சில, சங்க மருவிய காலத்தில் தோன்றி இக்காலத்தில் வளர்ந்து பெருகி விட்டமையைக் காணலாம். சோழர் காலத்தில் வளமான ஏராளமான நூல்கள் தோன்றின. கம்ப இராமாயணம், சீவக சிந்தாமணி போன்ற மாபெரும் காப்பியங்கள் தோன்றிய காலம். இக்கால இலக்கியங்கள் தமிழ் மொழியின் பொற்கால இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. ஆயிரக்கணக்கான பாடல்களைத் தன்னகத்தே கொண்ட நூல்கள் பலப்பல. தமிழ் இலக்கிய வரலாற்றில் மிக ஏராளமான இலக்கியங்கள் தோன்றிய காலமும் இதுவே. தமிழ் வளர்ச்சி உச்சக்கட்டத்தில் இருந்த காலமும் இதுவே ஆகும். இலக்கியப் பாரம்பரியத்தைப் போலவே இலக்கணப் பாரம்பரியமும் உண்டு. சோழர் காலத்தில் வீரசோழியம், நேமிநாதம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் தோன்றின. சோழர் காலக் கல்வெட்டுக்களும் நிறைய கிடைத்துள்ளன. மிகப் பழங்காலத் தமிழோடு இடைக்காலத் தமிழை ஒப்பிட்டு நோக்கின், அம்மொழி எய்தியுள்ள பெருமாற்றம் நன்கு புலனாகும். சோழர் காலத் தமிழைச் சோழர் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள், இலக்கணங்கள், கல்வெட்டுக்கள் மூலம் நன்கு அறியலாம்.

பல்லவர் காலத்திய ஒலியன்களான உயிர் எழுத்துக்கள் சோழர் காலத் தமிழிலும் ஒலியன்களாக விளங்கின.

| | |
|---|---|
| இ ஈ | உ ஊ |
| எ ஏ | ஒ ஓ |

அ ஆ

பல்லவர் கால மெய்யொலியன்கள் சோழர் காலத்திலும் தொடர்ந்தன.

க் ச் ட் ற் த் ப்<br>
ண் ன் ம்<br>
ய் ழ் ர் ல் வ்<br>
ள்

Scanned by TapScanner

எல்லா இடங்களிலும் வரும். எகர ஒகரங்கள் சொல்லின் இறுதி வாரா.

மெய் ஒலியன்கள்

க் ச் ட் த் ப்
ஞ் ண் ன் ம்
ய் ழ் ர் ல் வ்
ள்

என்பன மெய்யெழுத்துக்களில் ஒலியன்களாக விளங்கின. னகரத் திற்கு நகரமும் மகரத்திற்கு ஙகரமும் மாற்றொலியன்களாகும் (allophones). மொழியின் இடையிலும் கடையிலும் வருவதனை னகரம் என்றும் மொழி முதல் வருவதனை நகரம் என்றும் வேறு படுத்தியிருப்பர்.

நெடில் மெய்களுக்கு அல்லது மெய்ம் மயக்கங்களுக்கு முன்னர் நெடில் குறிலாக மாறுவது என்பது பல்லவர் காலத்திலும் பின்னரும் பெருவழக்காயிற்று.

நீக்கி > நிக்கி
ஆழாக்கு > ஆழக்கு
நீந்தமிழ் > நிந்தமிழ்
வீற்றிருந்தருளி > விற்றிருந்தருளி
மூன்று > முன்று

பல்லவர் காலத்தில் அகரம் இகரமாதலைக் காண்கிறோம்.

மங்கலம் > மங்கிலம்
மேலன > மேலின
கடா > கிடா

இகரம் உகரமாதலையும் இக்காலத்தில் காண்கிறோம்.

விழிஞம் > வுழிஞம்.

ஐகாரம் அகரமாகின்றது.

ஐந்து > அஞ்சு
தலை > தல
பனைகாய் > பனங்காய்.

ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த கூரம் செப்பேட்டில் ஐந்தே என்பது அயிந்தே எனக் காணக் கிடக்கின்றது.

ஐகாரம் அகரமாவதுடன் எகரமாகவும் மாறுகின்றது.

அரசர் > அரைசர் > அரெசர்
தலை > தலெ

பெண்பாலுக்குரிய விகுதியாக மி,சி, ஆட்டி, ஆத்தி போன்றவற்றைக் குறிப்பிடுகிறது (சிறுமி, ஆய்ச்சி, வெள்ளாட்டி, வண்ணாத்தி). நாற்பால் சங்க இலக்கியங்களை நோக்கக் 'கள்' புதிய விகுதியாகத் தோன்றுகிறது. ஆனால், அவ்விகுதி மற்ற திராவிட மொழிகளில் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. மி,சி போன்ற பெண்பால் விகுதிகள் சிலப்பதிகாரம் கலித்தொகையிலும் காணப்படுகின்றன. ஆட்டி, ஆத்தி போன்றவை உண்மையிலேயே புதிய விகுதிகளாகும். பலர் பால் விகுதியாக அர், ஆர்கள், கள், மார் (நூற்பா.30) முதலியவற்றை வீரசோழியம் குறிப்பிடுகின்றது. ஆனால், இவ்விகுதிகள் சங்க இலக்கியங்களிலே குறைந்த எண்ணிக்கையில் வந்துள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 'கள்' என்ற விகுதி நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் இருபத்தைந்து இடங்களில் வந்துள்ளது.

**பதிலிடு பெயர்கள் (Pronouns):**

இடைக்காலத் தமிழில் 'நீம்' என்ற வடிவமும் 'நீங்கள்' என்ற இரட்டைப் பன்மையும் நிலைபெற்றன.

நீம்- சீவகசிந்தாமணி 1932. 3
நீங்கள் -அப்பர் தேவாரம் 4;45.7

சங்க காலத்தில் 'கள்' விகுதி மிக அருகியே காணப்படுகிறது. அதுவும் அஃறிணைச் சொற்களில் மட்டுமே வந்துள்ளது. ஆனால், சங்கம் மருவிய காலத்தில் உயர்திணையுடனும் வருவதும் இரட்டைப் பன்மைச் சொற்களாக வருவதும் குறிப்பிடத்தக்கது. ஆனால், இடைக்காலத் தமிழில் இது பெருமளவில் வருவது இவ்விரு காலப் பகுதிகளுக்கிடையேயுள்ள வேறுபாட்டினைக் காட்டுகிறது. உயர்திணைப் பெயர்ச் சொற்களில்மட்டுமின்றிப் பதிலிடு பெயர்களிலும் இப்பண்பினைக் காணலாம். யாங்கள், நாங்கள், எங்கள், நங்கள் போன்ற தன்மைப் பன்மைப் பதிலிடு பெயர்களும் நீங்கள், நீர்கள், நுங்கள், உங்கள் போன்ற முன்னிலைப் பதிலிடு பெயர்களும் தங்கள், தாங்கள், அவர்கள், இவர்கள், யாவர்கள் போன்ற பதிலிடு பெயர்களும் புதிய கூறுகளாகக் கருதத்தக்கன.[1]

| | |
|---|---|
| யாங்கள் | பெரிய புராணம் 2813. 4. |
| நாங்கள் | நா.தி.பி. 477. 7. |
| " | பெரிய புராணம் 2660. 2. |
| எங்கள் | நா.தி.பி. 3. 2. |
| " | பெரிய புராணம் 2376. 2. |
| நங்கள் | நா.தி. பி. 974.4. |
| நீங்கள் | நா. தி.பி. 381. 3. |

1. ச. அகத்தியலிங்கம்: சங்கத் தமிழ்-I, பக். 34-35, அண்ணாமலை நகர், 198

| | |
|---|---|
| நீங்கள் | பெரிய புராணம் 2457.4. |
| நீர்கள் | நா. தி. பி. 2543.1. |
| நுங்கள் | நா.தி. பி. 1885.4. |
| " | பெரிய புராணம் 695.4. |
| உங்கள் | நா. தி. பி.389. 1. |
| " | பெரிய புராணம் 2031. 2. |
| தங்கள் | நா.தி.பி.71. 2. |
| " | பெரிய புராணம் 2110. 1. |
| தாங்கள் | நா.தி.பி. 1052. 3. |
| " | பெரிய புராணம் 2377.4. |
| அவர்கள் | நா. தி. பி. 914.4 |
| " | பெரிய புராணம் 1995. 3. |
| இவர்கள் | நா. தி. பி. 1409.1. |
| " | பெரிய புராணம் 2344. 1. |
| யாவர்களும் | பெரிய புராணம் 1075. 4. |

## வேற்றுமை (Case)

மூன்றாம் வேற்றுமைக்கு ஆல், ஆன், ஒடு, ஓடு என்னும் உருபுகளையும் ஐந்தாம் வேற்றுமைக்கு இன், இல், ஆகிய உருபுகளையும் ஆறாம் வேற்றுமைக்கு அது, ஆது, அ ஆகியவற்றையும் ஏழாம் வேற்றுமைக்கு ஏறத்தாழ இருபத்தியெட்டு உருபுகளையும் (நன். 302) நன்னூலார் குறிப்பிடுகின்றார். ஆறாம் வேற்றுமைக்குத் தொல்காப்பியர் 'அது' என்னும் உருபினை மட்டும் கூறிச் செல்கிறார். அது ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவானதாகச் செயல்பட்டது. ஆனால், நன்னூலார்,

> 'ஆறனொருமைக்கு அதுவும் ஆதுவும்
> பன்மைக்கு அவ்வும் உருபாம்.' (நன். 300)

என ஒருமை, பன்மை வேறுபாட்டினைப் புலப்படுத்தியிருப்பது காலப் போக்கில் மொழி வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறிப்பதாக அமையும். 'ஊரைச்சென்றான்' என்பது 'ஊருக்குச் சென்றான்' என மாறி வழங்குதல் சோழ கால முடிவுக்குள் நடந்த மாற்றமாகும்.

## 'இயக்கு வினை' (Causative):

இயக்குவினை விகுதியாக -பி, -வி (காண்பி, செய்வி) சங்க மருவிய காலத்திலே காணப்பட்டாலும், சோழர்காலத் தமிழில் தான் அதிகம் பயின்று வந்துள்ளது. இகர அளபெடையும் காரணவினை காட்டும் உருபாக அக்காலத்தில் இருந்துள்ளது.

இரீஇ - புற. 150.8
போர்ப்பித்து - புற. 2865
அறிவித்து - கலி. 13615

# 10

# நாயக்கர் காலத் தமிழ்

பண்டைக் காலத் தமிழுக்கும் இடைக்காலத் தமிழுக்குமிடையே வேறுபாடுகள் பலவற்றைக் காண்கிறோம். இடைக்காலத் தமிழின் சிறப்புக் கூறுகளில் சில சங்கமருவிய காலத்தில் தோன்றி இடைக்காலத் தமிழில் நிலைத்து விட்டமையைக் காண்கிறோம். புதிய கூறுகள் மட்டுமின்றி இங்கொன்றும் அங்கொன்றுமாகக் காணப்படும் சில கூறுகள் பிற்காலத்திலும் பல்கிப் பெருகி வளர்ந்துள்ள நிலையையும் காண்கிறோம். இடைக்காலத் தமிழிலேயே பல்லவர், சோழர் காலத் தமிழுக்கும் நாயக்கர் காலத் தமிழுக்கும் சிறிது வேறுபாடுண்டு. பக்தி இலக்கியங்கள் என்று கருதப்படும் தேவாரத் திருவாசகங்களும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தமும், சிந்தாமணி, கம்ப ராமாயணம் போன்ற காப்பிய நூல்களும் நேமிநாதம், வீரசோழியம், நன்னூல் போன்ற இலக்கண நூற்களும் தோன்றி,அவை தமிழ்மொழியின் பொற்கால இலக்கியங்களாகக் கருதப்பட்டன. ஆனால், நாயக்கர்காலத்தில் வளமான இலக்கியங்கள் தோன்றவில்லை. கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் மாலிக்காபூர் தென்னகத்தின்மீது படையெடுத்தான். இதனால் தமிழர் தம் உரிமை இழந்தனர். மதுரையில் தோன்றிய இசுலாமியர் ஆட்சி, விசயநகரப் பேரரசின் தலையீட்டால் மறைய மதுரையில் நாயக்கர் ஆட்சி வேரூன்றியது. நாயக்கர்கள் இருநூற்றேழு ஆண்டுகள் (1529-1736) மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். இக்காலக் கட்டத்தில் வில்லிபாரதம் போன்ற காப்பியம் தோன்றியது. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் போன்ற நூல்கள்தோன்றின. மேலும் நாட்டுப்புற இலக்கியங்கள், மாகபுராண அம்மானை இராமப்பய்யன் அம்மானை போன்ற நூல்கள் தோன்றின. மேலை நாட்டினரான பெஸ்கி என்னும் வீரமாமுனிவரின் A `Grammar of the common dialect of the Tamil language' என்றஇலக்கண நூலும் இக்காலக் கட்டத் திலேதான் எழுந்தது. இது பேச்சுத் தமிழை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இலக்கண நூலாகும். மேலை நாட்டார் தமிழைப் பற்றி எழுதியவை தமிழ்மொழி வரலாற்றிற்கு முக்கிய சான்றாகத் திகழ்கின்றன என முன்னர்க் கண்டோம். தமிழ் ஒலிகளை மேலை நாட்டார் எவ்வாறு உச்சரித்தனர், எவ்வாறு அவர்களது மொழியில் எழுதினர் என்பதும் தமிழ் ஒலிகளைப் பற்றி அறியவும் இந்நூல் பெருந்துணையாக உள்ளது.

Scanned by TapScanner

'ற'கரம் பேச்சுத் தமிழில் ஒலியனாகக் காணப்படவில்லை என்று வீரமாமுனிவர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இன்றைய கிளைமொழிகள் சிலவற்றிலும் 'ற' கரம் ஒலியனாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வில்லிபாரத மொழிநடை தமிழும் வடமொழியும் கலந்த தொன்றாகும். தமிழும் வடமொழியும் கலந்த கலப்பினால், கீழ்க் கண்ட மெய்ம் மயக்கங்கள் (clusters) வில்லி பாரதத்தில் காணப்படு கின்றன.

-ம்ச்-, -ல்ச்-, -த்ண- -த்வ்-, -க்வ்-, -த்ய்-, -ப்ர்-, -த்ர்-, -ச்ர்-

சமஸ்கிருத ஒலியன்களான Ś Ṣ S, தமிழில் புகுத்தியமையால் கீழ்க்கண்ட மெய்ம் மயக்கங்கள் காணப்படுவதாகப் பெஸ்கி என் னும் வீரமாமுனிவர் குறிப்பிடுகிறார்.

St, Sn, Sm, Sp, Sk, ṣṭ, tr, Ḳs என்ற மெய்ம் மயக்கம் ṭc என எழுதப்பட்டுள்ளது. 'ந'கர 'ன'கர ஒன்றாதல், 'ர'கர, 'ற'கர ஒன்றாதல் போன்ற பல்லவர், சோழர் கால மாற்றங்கள் நாயக்கர் காலத் தமிழிலும் தொடர்ந்தன.

உயிர்களின் மாத்திரையும் தன்மையும் மாறுபட்டதே இக் காலத்திற்குரிய சிறப்புக்கூறு எனப் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்[1] குறிப்பிடுகிறார். இவர் குறிப்பிடும் உயிரொலி, மெய் யொலி மாற்றங்கள் சிலவற்றைக் காண்போம்.

இரட்டை மெய்க்குப் பின்னோ மெய் மயக்கத்திற்குப் பின்னோ வரும் நெடில் உயிர் குறிலாகும்.

வணங்குவார்க்கு > வணங்குவர்க்கு

<u>'இ'கரம் 'உ'கரமாதல்:</u>

வளைநா ஒலி அல்லது இதழ் ஒலி மெய்கள் வரும் சூழலில் உகரம் தோன்றுகின்றது $(c_1)\ v_1\ c_2\ v_2\ v_3$ என்ற வாய்பாட்டில் அமைந்த சொற்கள் உள்ளன. அவற்றில் v2 இகரமாகி c2 என்பது 'ழ்' அல்லது 'ள்' அல்லது 'ர்' என்றோ இருந்தால் இகரம் உகரமாகும்.

சிலிர்க்கு > சிலுருக்கு
தமிழ் > தமுழு
மதில் > மதுலு

'அ'கரம் இகரமாதல்:

அதனால் > அதினால்
வஞ்சனை > வஞ்சினை

1. தெ. பொ. மீனாட்சி சுந்தரன் : தமிழ் மொழி வரலாறு, பக். 200-209. மதுரை. 1977

5.13

நாயக்கர்கள் இரு நூறு ஆண்டுகள் ஆண்டதால் தெலுங்கு மொழியின் செல்வாக்கினையும் தெலுங்கு மொழியில் சொற்களையும் காண்கிறோம். வீரமாமுனிவர் தமிழ் மொழிக்கு இலக்கணம் எழுதியதோடு, அகராதிகளையும் படைத்துத் தமிழ் மொழிக்கு வளம் சேர்த்தார் என்பது குறிப்பிடத்தக்க. அந்நியர் ஆட்சியும் மேலை நாட்டாரின் வருகையும் குறிப்பிடத்தக்கவையாகும். நாட்டுப்புற இலக்கியங்களும் பேச்சுத் தமிழிலேயே அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. திருமலை நாயக்கரின் தளபதி இராமப் பய்யனுக்கும் இராமநாதபுர சேதுபதிகளுக்குமிடையே நடந்த போரை விவரிப்பதுதான் இராமப்பய்யன் அம்மானையாகும். நாயக்கர் காலத் தமிழை வில்லிபாரதம், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், பெஸ்கியின் தமிழ் இலக்கணம் மற்றும் நாட்டுப்புற இலக்கியங்களின் அடிப்படையில் ஆராய்வோம்.

பல்லவர், சோழர் கால ஒலியன்களான உயிர், மெய் எழுத்துகள் நாயக்கர் காலத் தமிழிலும் ஒலியன்களாக விளங்கின.

உயிர் :

இ ஈ      உ ஊ
எ ஏ      ஒ ஓ
அ ஆ

மெய் :

க் ச் ட் ற் த் ப்
ஞ் ண் ன் ம்
ய் ழ் ர் ல் வ்
ள்

பண்டைத் தமிழில் நகரமும் ணகரமும் வெவ்வேறு ஒலியன்களாக இருந்தன. ஆனால், இடைக்காலத் தமிழில் இவ்விரண்டு ஒலியன்களும் இணைந்துவிட்ட நிலையைக் காண்கிறோம். தொல்காப்பியர் சகரம் மொழிமுதல் வாராது என்கிறார். சங்க கால இலக்கியங்களிலேயே சகர மொழி முதல் சொற்களைக் காண்கிறோம். சங்க மருவிய காலத் தமிழில் சைகார முதற் சொற்கள் வருகின்றன. நாயக்கர் கால வில்லிபாரதத்தில் சௌகாரச் சொற்கள் வருகின்றன[1].

| | | |
|---|---|---|
| சௌபால | - வில்லிபாரதம் | 2.2:258-2,9 |
| சௌபாலர் | - வில்லிபாரதம் | 1.3:5-1 |
| " | | 7.14:19-33 |
| சௌபாலன் | - வில்லிபாரதம் | 4.3:50-1 |
| " | | 5.4.178-4 |
| " | | 9.18:19-2 |
| " | | 9.18.10-4 |

1. K. Kuttalam Pillai : The Descriptive analysis of Villiparatam, Ph.D. Thesis, Kerala University, 1974.

# 11

# மராட்டியர் காலத் தமிழ்

நாயக்கரது ஆட்சிக்குப் பின் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 1676 முதல் கி.பி. 1799 வரை ஆட்சி புரிந்தும் பிறகு கி.பி. 1855 வரை தஞ்சையிலேயே செல்வாக்குப் பெற்றும் விளங்கினர். கி.பி. 1676இல் ஏகோஜி தஞ்சையைக் கைப்பற்றித் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரியத் தொடங்கினார். அது முதல் தஞ்சையில் மராட்டியர் ஆட்சி தொடரலாயிற்று. ஏறத்தாழ நூற்றெண்பது ஆண்டுகள் தஞ்சையிலேயே வேரூன்றி இருந்திருக்கின்றனர். தமிழ், தெலுங்கு, மராட்டி, வடமொழி ஆகிய மொழிகளில் பல்வேறு வகையான இலக்கியங்கள் தோன்றின. மராட்டிய மன்னர்களில் சிலர் பன்மொழிப் புலவர்களாக விளங்கியதோடு மட்டுமின்றி இலக்கியங்களையும் படைத்துள்ளனர். சரபோஜி உலகப் புகழ் பெற்ற சரசுவதி மகாலை உருவாக்கி வேதாந்தம், காவியம், இலக்கியம், இசை, நடனம், மருத்துவம், வான இயல் தொடர்பான சுவடிகளைச் சேகரித்தார். நாணயங்கள், ஓவியங்கள், அரிய நூல் களையும் சேகரித்தார். பழஞ்சுவடி ஆய்வு மட்டுமின்றி அறப்பணிகளும் ஆலயப் பணிகளும் செய்தார். சரசுவதி மகால் சரபோஜியின் சாதனைக்குச் சான்றாகத் திகழ்கின்றது. மராட்டியர் ஆட்சிக்காலத்தில் தூது, உலா, நாடகம், கோவை, சதகம், அம்மானை, புராணம் சம்பந்தமாக அறுபத்தியெட்டு இலக்கியங்கள் மலர்ந்துள்ளன. தமிழ்ப் புலவர்களை ஆதரித்தும் வந்துள்ளனர். மராட்டிய ஆட்சியின்போது தமிழ், தெலுங்கு, மராட்டி, சமஸ்கிருதம், ஆங்கிலம், அரபிவழக்கில் இருந்தன. உணவு சம்பந்தப்பட்ட மராட்டி சொற்கள் நிறைய தமிழில் கலந்துள்ளன. மராத்தி மொழிக் கல்வெட்டுக்கள் நாகரி எழுத்துக்களிலும் அரசு ஆவணங்கள் மோடி எழுத்துக்களிலும் எழுதப் பெற்றன. மராட்டியர் காலத் தமிழை இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள் துணைகொண்டு ஆராயலாம்.

நாயக்கர் கால ஒலியன்களான உயிர், மெய் மராட்டியர் காலத் தமிழிலும் ஒலியன்களாக விளங்கின.

உயிர் :

| | |
|---|---|
| இ ஈ | உ ஊ |
| எ ஏ | ஒ ஓ |

அ ஆ

மெய் :

க் ச் ட் த் த் ப்
ஞ் ண் ன் ம்
ய் ழ் ர் ல் வ்
ள்

மராட்டியர் கால ஒலி மாற்றங்களை இலக்கிய, கல்வெட்டு, செப்பேடுகளைக் கொண்டு ஆராய்வோம். சோழ, நாயக்கர் கால மாற்றங்கள் பெரும்பாலும் மராட்டியர் காலத்திலும் தொடர்கின்றன எனலாம்.

**இலக்கியங்கள் :**

| | | | |
|---|---|---|---|
| i) | ர | > | ற |
| | தெரிய | > | தெறிய |
| | மாரன் | > | மாறன் |
| | நெருக்கு | > | நெறுக்கு |
| ii) | ற | > | ர |
| | அறியாத | > | அரியாத |
| | குறை | > | குரை |
| | பதற | > | பதர |
| | பொறுக்க | > | பொருக்க |
| | மறக்க | > | மரக்க |
| | உறவாடி | > | உரவாடி |
| | நூறு | > | நூரு |
| iii) | ற | > | ட |
| | உற்சாகம் | > | உட்சாகம் |
| iv) | ழ | > | ள |
| | பழம்பஞ்சாரம் | > | பளம்பஞ்சாரம் |
| v) | ள | > | ழ |
| | வளமை | > | வழமை |
| vi) | ற்ற் | > | த்த் |
| | கற்ற | > | கத்த |
| | கிணற்றில் | > | கிணத்தில் |
| | வற்றாத | > | வத்தாத |
| | நேற்று | > | நேத்து |
| | பிதற்றி | > | பிதத்தி |
| | கற்றவர் | > | கத்தவர் |

Scanned by TapScanner

... டுக்கள் !

... மராட்டியர் கால கல்வெட்டுக்களின் துணை கொண்டு ஒலி ... களைக் காண்போம்.

| | | | |
|---|---|---|---|
| i) | அ | > | இ |
| | சதும் | > | இதும் |
| | பரிபாலனம் | > | பரிபாலினம் |
| ii) | அ | > | எ |
| | கங்கை | > | கெங்கை |
| | கருடன் | > | கெருடன் |
| | தசமி | > | தெசமி |
| | லட்சுமணன் | > | லெட்சுமணன் |
| | ரகுநாதன் | > | ரெகுநாதன் |
| | யஸ்வத்தம்பா | > | யெஸ்வத்தம்பா |
| iii) | அ | > | ஐ |
| | மத்துமுன்ன | > | மைத்துமுன்ன |
| iv) | இ | > | அ |
| | மதின் | > | மதன் |
| v) | இ | > | எ |
| | நிலம் | > | நெலம் |
| vi) | உ | > | {இ,எ} |
| | புஞ்சை | > | பிஞ்சை |
| | புறம் | > | பிறம் |
| | சுவர் | > | செவர் |
| vii) | {இஈஎ} | > | {யியீயெ} |
| | இதின்மேல் | > | யிதின் மேல் |
| | இதுக்கு | > | யிதுக்கு |
| | இந்த | > | யிந்த |
| | இவர்கள் | > | யிவர்கள் |
| | இலாகா | > | யிலாகா |
| | இறை | > | யிறை |
| | ஈசன் | > | யீசன் |
| | ஈழம் | > | யீழம் |
| | எங்களூர் | > | யெங்களூர் |
| | எல்லை | > | யெல்லை |
| | எழுதி | > | யெழுதி |

... இராசு, தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள், தமிழ்ப் ... பல்கலைக்கழகம், 1987.

Scanned by TapScanner

| | |
|---|---|
| /ர்ன/ | கவர்னர் |
| /ர்ர/ | குர்ரான் |
| /ர்ஜ/ | கர்ஜனை |
| /ல்ஷ/ | கால்ஷியம் |

## இன்றைய பேச்சுத் தமிழில் ஒலி மாற்றங்கள்:

பேச்சுத் தமிழில் நிகழும் ஒலி மாற்றங்கள் குறித்து இங்குக் காண்போம். டாக்டர் கு. பரமசிவம்[1] அவர்கள் எழுதிய 'இக்காலத் தமிழ் மரபு' என்ற நூலில் 'உரையாடலில் ஒலி மாற்றங்கள்' என்ற இயலில் மிக விரிவாக ஆராய்ந்துள்ளார். அவற்றில் சிலவற்றை இங்குத் தொகுத்துக் காண்போம்.

(i) இகர எகர, உகர ஒகர மாற்றம்:

| | |
|---|---|
| இலை | எலை |
| இடம் | எடம் |
| உரல் | ஒரல் |
| குடை | கொடை |
| முதல் | மொதல் |

(ii) இகர எகரங்கள் ஒகரமாதல்:

| | |
|---|---|
| பிறப்பு | பொறப்பு |
| பிணம் | பொணம் |
| பெட்டி | பொட்டி |
| பெண் | பொண்ணு |

(iii) இகரம் உகரமாதல்:

| | |
|---|---|
| பிட்டு | புட்டு |
| பிள்ளை | புள்ளை |

(iv) உகரம் இகரமாதல்:

| | |
|---|---|
| புல்லு | பில்லு |
| புறா | பிறா |

(v) ஔகாரத் திரிபு:

ஔகாரம் அவ் என்றே உச்சரிக்கப்படுவதோடு எழுதவும் படுகிறது.

| | |
|---|---|
| ஔவை | அவ்வை |

1. கு. பரமசிவம் : இக்காலத் தமிழ் மரபு, பக். 48-67, சிவகங்கை, 1983.

(vi) ஓரினமாதல் (Assimilation)

ஓர் ஒலியனுக்கு முன்னரோ, பின்னரோ வருகின்ற மற்றொரு ஒலியன் முந்திய அல்லது பிந்திய ஒலியனின் உச்சரிப்புக்கேற்ப மாறி வருகின்ற மாற்றத்தை ஓரினமாதல் என்பர்.

ஒரு சொல்லின் முன்னால் வருகின்ற ஒலியன்களுக்கேற்பப் பின்னால் வரும் வேறோர் ஒலியன் வேறுபடுமாயின் அதனை முன் வழி ஓரினமாக்கம் (Progressive assimilation) எனலாம்.

வேள்விக்கு > வேள்விக்கி
கத்திக்கு > கத்திக்கி

ஒரு சொல்லில் பின்னால் வருகின்ற ஒலியனுக்கேற்ப முன் னால் வரும் ஒலியனின் உச்சரிப்பு மாறுபடுமாயின் அம்மாற்றம் பின்வழி ஓரினமாக்கம் (Regressive assimilation) எனப்படும்.

செண்பகம் > செம்பகம்
வன்சினம் > வஞ்சினம்
எண்பது > எம்பது

சொற்களில் அடுத்தடுத்துக் காணப்படுகின்ற ஒலியன்களில் ஓரினமாக்க மாற்றம் ஏற்படுமாயின் அதனைத் தொடர்வழி ஓரின மாக்கம் (Continuous assimilation) என்பர்.

நன்செய் > நஞ்செய்
புன்செய் > புஞ்செய்

(vii) அண்ணமாதல் (Palatalization)

அண்ணத்தையொட்டிப் பிறக்கின்ற ஒலி சகர ஒலியாகும்.

அடித்தான் > அடிச்சான்
கலைத்தான் > கலைச்சான்
எரிந்தது > எரிஞ்சது
உடைந்தது > உடைஞ்சது

(viii) பல்லொலியாதல்:

நுனிநா நுனியண்ண அடைப்பொலி (ற்) இரட்டித்து வரும் போது, பேச்சுத் தமிழில் இரட்டைத் தகரமாக மாறுகிறது.

குற்றம் > குத்தம்
விற்றான் > வித்தான்
பற்று வரவு > பத்து வரவு

(ix) 'ந'கரம் 'ன'கரமாதல்:

நுனிநாப் பல் மூக்கொலியாகிய நகரம் நுனியண்ண மூக் கொலியாகிய 'ன'கரமாக உச்சரிக்கப்படுகிறது.

Scanned by TapScanner

மொழி வரலாறு முழுமையடையும். பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தமிழ்மொழி வரலாற்றை ஆராயும்போது கல்வெட்டு மொழி, தொல்காப்பியத்தமிழ், சங்ககாலத் தமிழ் என்ற வரிசையிலே தான் ஆய்வு செய்கின்றார். பல்லவர்கால, சோழர்காலத் தமிழை ஆராயக் கல்வெட்டுக்களையே அடிப்படையாகக் கொண்டு உள்ளார் என்பதிலிருந்து கல்வெட்டுத்தமிழின் இன்றியமையாமை என்பது நன்கு புலனாகின்றது.

பி.சி. சாப்ரா (B.Ch. Chabra) அவர்களும் டாக்கர் டி.ஸி. சர்க்கார் (Dr. D.C. Sirkar) அவர்களும் மொழியியலுக்குக் கல்வெட்டுக்களின் இன்றியமையாமையை முதலில் உணர்ந்தனர். தமிழ்மொழியைப் பொறுத்தமட்டில் கல்வெட்டின் இன்றியமையாமையை முதலில் உணர்ந்தவர் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் ஆவார். டாக்டர் கே. கணபதி பிள்ளை அவர்கள்தான் முதன் முதலில் தமது டாக்டர் பட்ட ஆய்வுக்கு 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுத்தமிழை ஆய்வு செய்தார். ஜெயகுமாரி அவர்கள் எம்.லிட் ஆய்வுக்காக 7 ஆம் நூற்றாண்டிலிருந்து 11 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதிக் கல்வெட்டுக்களை ஆய்வு செய்தார். பாகீரதி அவர்கள் தமது எம். லிட் ஆய்வுக்குக் கி.பி. 1050 முதல் 1250 ஆம் நூற்றாண்டு வரையுள்ள கல்வெட்டுக்களை மொழியியல் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்தார். பேராசிரியர் செ. வை. சண்முகம் அவர்கள் தமது டாக்டர் பட்ட ஆய்வுக்கு 14 ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்து 17 ஆம் நூற்றாண்டு வரையுள்ள கல்வெட்டுத் தமிழை ஆய்வு செய்தார். பன்னீர் செல்வம் அவர்கள் தமது டாக்டர் பட்ட ஆய்வுக்கு கி.பி. 7, 8, 9 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களை மொழியியல் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்தார். கி.பி. 800 - 920 ஆம் நூற்றாண்டு கல்வெட்டுக் தமிழையும் சடாவர்ம சுந்தரபாண்டியன், மாறவர்மன்குலசேகரன் காலத்திய கல்வெட்டுக்களையும் மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து வேலுப்பிள்ளை அவர்கள் இரண்டு டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்கள். இதைத் தவிர 'சாசனமும் தமிழும்' என்ற நூலும், (Language Variations in Tamil Inscriptions) ஆராய்ந்து, டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்கள். குமாரி கார்த்திகேயினி அவர்கள் டாக்டர் பட்ட ஆய்வுக்குக் கி.பி. 900 - 1050 ஆம் ஆண்டு கல்வெட்டுக்களை மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்துள்ளார்கள். பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் அவர்களும் டாக்டர் செ. வை. சண்முகம் அவர்களும் இணைந்து 1250 - 1350 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப் பகுதி கல்வெட்டுக்களை மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து நூலாக வெளியிட்டுள்ளனர்.

### அக்கால வழக்கா? கல்வெட்டுபவரின் தவறா?

கல்வெட்டுக்கள் பேச்சுத்தமிழில் அமைந்துள்ளன. கல்வெட்டை வெட்டியவர்கள் அக்காலத்தில் பேச்சை எப்படிக்

# 13

# கல்வெட்டுத் தமிழ்

கல்லின் மீது பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களுக்குக்
வெட்டெழுத்து என்று பெயர். இவை அழியாப் பொருட்கள்
எழுதப்பட்டுள்ளமையால் பல நூற்றாண்டுகள் கடந்தும் நமக்
கிடைத்துள்ளன. ஒரு மொழியின் வரலாற்றில் மிக முக்கியமான
இடத்தைப் பெறுவன கல்வெட்டுக்களே. எத்தனையோ பழமையான
மொழிகள் கல்வெட்டுக்களையே ஆதாரமாகக் கொண்டுள்ளன.
எகிப்திய மொழி, உக்ரிடிக்மொழி, ஹிட்டைட்மொழி, பினீசிய
மொழி போன்ற மொழிகள் அனைத்தும் கல்வெட்டுக்களிலேயே
வாழ்பவை. இம் மொழிகளின் பழமையும் வளமும் கல்வெட்டுக்களி
னாலேயே வெளிவந்தன. இத்தகைய கல்வெட்டுக்கள் அவை எழுதப்
பட்டிருக்கும் மொழிகளில் தன்மையையும் காட்டி நிற்கும். எத்த
னையோ நூற்றாண்டுகளுக்கு முன்னர் பிறந்த மொழிகளின் அமைப்
பையும் ஆக்கங்களையும் அறுதியிடுவதற்கு இவை உதவுகின்றன.
பல்வேறு நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் ஒரு
மொழி எவ்வாறு வளர்ந்து வந்துது என்றும் அம்மொழியில் எத்த
கைய மாற்றங்கள் உண்டாயின என்றும் பேச்சு மொழிக்கும் இலக்
கிய மொழிக்கும் இடையே என்னென்ன மாறுபாடுகள் இருக்கின்
றன என்றும் சுட்டிக் காட்டுவனவாக அமைகின்றன. திராவிட
மொழிகளில் குறிப்பாகத் தமிழ் மொழியில் பல்லாயிரக்கணக்கான
கல்வெட்டுக்களைக் காண முடிகிறது. இவற்றுள் மிகப்பழமை
யானவை பிராமி கல்வெட்டுக்களாகும். இவை கி.மு. மூன்றாம் நூற்
றாண்டைச் சார்ந்தவை என்பர். இவற்றைக் கீழவளைவு, மறுகால்
தலை, திருவாதவூர், ஆனைமலை, அழகர்மலை, மேட்டுப்பட்டி,
முத்துப்பட்டி, சித்தன்னவாசல், விக்கிரமங்கலம் போன்ற பல
இடங்களில் காணலாம். அசோகர் பயன்படுத்திய பிராமி எழுத்துக்
களைத் தென்னிந்திய மொழிகளுக்கேற்ப மாற்றியமைத்ததே
தென்னிந்தியப் பிராமி என்பர். பொதுவாகத் தமிழ் நாட்டில்
கிடைக்கும் கல்வெட்டுக்கள் தமிழ், கிரந்தம், வட்டெழுத்து ஆகிய
மூன்று வகை எழுத்துக்களால் ஆகியவை. குகைக் கல்வெட்டுக்கள்
பிராமி எழுத்துக்களாலானவை. கிராந்த எழுத்துக்களாலும் தமிழ்
எழுத்துக்களாலும் ஆகிய கல்வெட்டுக்கள் கி.பி. 6ஆவது
நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. பிராமி கல்வெட்டுக்களை

Scanned by TapScanner

# 12

# பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்

மேலை நாட்டாரின் வருகைக்குப் பின்னர் தமிழ்மொழி வரலாற்றில் பெரியதொரு மாற்றம் ஏற்பட்டது எனலாம். இலக்கிய வரலாற்றில் மட்டுமின்றி மொழி வரலாற்றிலும் இதனை நன்கு காணலாம். ஆங்கில மொழியின் செல்வாக்கை நன்கு உணரலாம். 19ஆம் நூற்றாண்டிலே தமிழ்மொழி, இலக்கிய வளர்ச்சிக்குப் பேருத வியாக இருந்தவை அச்சியந்திரங்களாகும். இந் நூற்றாண்டில்தான் தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டு வெளியிடப் பெற்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன்னர் நாட்டில் அமைதியின்மையைக் கண்டோம். கிறித்தவ சமயம் பரவியதையும் புதிய கல்வி முறை தோன்றியதையும் அறிவோம். மேனாட்டாரின் தொடர்பால் சிறுகதை, புதினம், பத்திரிகைகள், உரைநடை போன்ற பல்வேறு துறைகளில் தமிழ்மொழியும் நவீன மொழியாக வாழத் தலைப்பட்டது. மேனாட்டறிஞர்களான பெஸ்கி, ரேனியஸ், கிரால், போப், ஆர்டன், கால்டுவெல் ஆகியோர் 19 ஆம் நூற்றாண்டுத் தமிழைப் பற்றிக் குறிப்பாகப் பேச்சுத் தமிழைப் பற்றி நன்கு ஆராய்ந்துள்ளனர். கால்டுவெல் அவர்களைத் 'திராவிட மொழியியலின் தந்தை' எனக் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. மேலை நாட்டினரின் வருகையால் தமிழ் உரைநடை வளர்ச்சி பெற்றது. கலையியல், அறிவியல் போன்ற துறைகள் வளர வளரத் தமிழும் பல்வேறு மாற்றங்களைக் கண்டது. புதிய புதிய கலைச்சொற்கள் புதிய சில இலக்கணக் கூறுகள், புதிய வாக்கிய அமைப்புக்கள் போன்ற பல நிலைகளில் தமிழில் மாற்றங்கள் பல ஏற்பட்டன. புதிய புதிய சொல்லாக்கம், துணைவினை போன்றவற்றில் காணப்பட்ட மாற்றம் போன்றின்னோரன்ன பல வேறுபாடுகளை நன்கு காண முடியும். மேலும் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்பற்றி ஆராயும்போது, வானொலித் தமிழ், பத்திரிகைத் தமிழ், அறிவியல் தமிழ் பற்றியும் ஆராய வேண்டும். இந்நூற்றாண்டின் பரவல் செய்தித் தொடர்பின் சக்தி வாய்ந்த சாதனங்களாகத் திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை போன்றவை திகழ்கின்றன. இருபதாம் நூற்றாண்டில் வானொலி, பத்திரிகைகள் ஆகியவற்றின்மூலம் பொதுக்கிளைமொழியொன்று (Standard Dialect) உருவாகின்றது. அஃது அனைத்துக் கிளைமொழிகளின் பொதுப் பண்பைக் கொண்டதாகும். 19

Scanned by TapScanner

அடுத்துத் தமிழ் நாட்டில் கிடைப்பது திருநாதர்குன்றுக் கல்வெட்டாகும். தமிழ் எழுத்துக்களாலான இக்கல்வெட்டு கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக்கல்வெட்டுக்கள் எல்லாம் தமிழ்மொழியின் வளர்ச்சியையும் பேச்சு மொழியின் சாயலையும் காட்டுவனவாக உள்ளன. இலக்கியத்திற்கும் கல்வெட்டுக்களில் காணப்படும் மொழிக்குமிடையே பல வேற்றுமைகள் உண்டு. இலக்கிய மொழியில் ஏறாத பல பேச்சு வழக்குகளைக் கல்வெட்டு மொழியில் காணலாம். இக்கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்மொழி வரலாற்றைச் சிறந்த முறையில் உருவாக்கலாம். தமிழில் 'க' என்ற எழுத்து பல ஒலிகளாக ஒலிக்கின்றன. கால்டுவெல் தடையொலிகள் (plosives) மொழி முதலிலும் இடையே இரட்டித்து வருகையிலும் 'k' போன்ற உயிர்ப் பொலியாகவும், மொழிக்கிடையே உயிர் எழுத்துக்களின் நடுவே ஒற்றையாய் வரும்போதும் மெல்லெழுத்தின் பின் வரும்போதும் 'g' போன்ற ஒலிப்புடைய ஒலியாக (voiced)வும் ஒலிக்கின்றது. இம்மாற்றத்தை உயிர்ப்பொலி ஒலிப்பொலி மாற்றுச் சட்டம் (Law of Covertibillity of surds into sonants) எனப் பெயரிட்டுள்ளார். இம்மாற்றம் அடுத்து வரும் எழுத்துக்களின் சாயலால் ஏற்படுகின்றது. ஆனால், ஒலிப்புடைய தடையொலியையும் ஒலிப்பில் தடையொலியையும் ஒரே மாதிரி எழுதுகின்றோம். ஒலி வேறுபாடு இருந்தும் குறிவேறுபாடில்லை. அவற்றின் ஒலிமதிப்பை (phonetic value) எவ்வாறு முடிவு செய்வது? இச்சூழலில் கல்வெட்டுக்கள் நமக்குப் பெருந்துணை செய்கின்றன. ஏனென்றால் கல்வெட்டுக்களில் தமிழ்ச் சொற்கள் கிரந்தம், பிராகிருதம், தேவநாகரி போன்ற அயல்மொழி எழுத்துக்களில் எழுதப் பட்டுள்ளன. கிரந்த எழுத்துக்களில் ஒலிப்புடை ஒலிக்கும் ஒலிப் பிலா ஒலிக்கும் வேறுபட்ட வரிவடிவங்கள் உள்ளன. எனவே கல் வெட்டுக்களின் துணைக்கொண்டு தமிழ் ஒலியன்கள் ஒலிப்புடை யனவா ஒலிப்பில்லனவா என்று அறிய இயலுகின்றது.

தமிழ்மொழி வழக்கை இலக்கிய வழக்கு, பேச்சு வழக்கு என இருவகையாகப் பகுக்கலாம். கல்வெட்டு வழக்கு, பேச்சு வழக்கு டன் ஒத்தியல்வது. மக்கள் நாவில் வழங்கும் பேச்சு வழக்கில்தான் காலத்துக்குக் காலம் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும். இலக் கிய வழக்கைக் கற்றோர் மட்டுமே பேணிப் பாதுகாத்தனர். 19, 20ஆம் நூற்றாண்டு இலக்கியங்களில் பேச்சு வழக்கு மிகுதியாய் பயன்படுத்தப்பட்டது. தமிழறிஞர்கள் இலக்கிய வழக்குதான் உயர்ந் தது என்றும் பேச்சு வழக்கு உயர்ந்ததல்ல என்றும் நீண்ட காலமாக எண்ணினர். அவ்வெண்ணத்தின் விளைவு பேச்சு வழக்கு ஆய்வை புறக்கணித்தனர். கல்வெட்டுத்தமிழ் பேச்சுவழக்குத் தமிழின் நீண்ட கால வரலாற்றையறியத் துணைபுரிகின்றது. பேச்சு வழக்கும் இலக் கிய வழக்கும் தனித்தனி வரலாறு உடையன. ஒன்றின் தாக்கத்தை மற்றதில் காணலாம். இவ்விரண்டையும் ஆராய்ந்தால்தான் தமிழ்